குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

[ மலர் 40 ] துன்மதி ஆண்டு ஆவணித் திங்கள் 10—9—81 [ இதழ் 10

தருமையாதீனம் ஆவணிமூலவிழா - பூஜை மடாலயத்தில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
டாக்டர், திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு
'சங்க இலக்கியச் செல்வர்' என்னும் பட்டம் வழங்கியருளல்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40 | 10–9–81 | இதழ் 10

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

நரகம் இனிநாட
  நாடோம் உமையாள்
விரகர் தமிழ்மதுரை
  மேவித் — துரகநரி
ஆக்கினர் வைகையில்நீர்
  ஆடினேம் அவ்வெல்லைப்
போக்கலாம் யாம்திரிந்திப்
  போது.

— சொக்கநாத வெண்பா. 80

ஆசிரியர் :-

வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
**சி. அருணைவடிவேல் முதலியார்**

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | தமிழ்நாட்டுத் திருமடங்கள் ... | 433 |
| 2 | தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை... | 438 |
| 3 | சிவநாமாவளி இசைப் பாடல் ... | 442 |
| 4 | கவிதை அலைகள் ... | 443 |
| 5 | இந்துமதத்திற்குத் திரும்பியவர் அறிக்கை | 448 |
| 6 | கடிதம் ... | i |
| 7 | திருப்பெருவேளூர் திருத்தலையாலங்காட்டுத் தலச் சிறப்புக்கள் ... | 449 |
| 8 | அபிராமி அந்தாதி ... | 456 |
| 9 | ஊழும் முயற்சியும் ... | 461 |
| 10 | சைவாகமங்கள் ... | 466 |
| 11 | செய்திகள் ... | 472 |
| 12 | எதிர்காலம் ... | 475 |
| 13 | பார்வையாளர் குறிப்பு நகல் | 460, 480 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 18
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ, 125

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 40 | துன்மதி — ஆவணி — 10—9—81 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# தமிழ் நாட்டுத் திருமடங்கள்

## குறை நீக்கும் உரிமை :

உலகில் குற்றமே உடையவர்களும் இலர்: குணமே உடையவர்களும் இலர். இறைவன் ஒருவனே 'குறைவிலா நிறைவாய்' விளங்குபவன. மிகக்கற்ற சான்றோர்களிடமும் சிலநேரங்களில் குறைகள் தோன்றக்கூடும். இதனைவள்ளுவரும் 'அரியகற்று ஆசற்ருர் கண்ணும் தெரியுங்கால், இன்மை அரிதே வெளிறு' என்று பேசுவார். தவறுகள் தனிமனிதர்களிடமோ, சமுதாயத்திடமோ, நிறுவனங்களிடமோ காணப்படுமாளுல் அவற்றைக் களைந்து நெறிநிறுத்த வேண்டிய கடமையும் – பொறுப்பும் அரசுக்கு உண்டு. இதனை எவரும் மறுக்க இயலாது. புறநானூற்றுப் புலவரும் 'நன்னடை நல்கல், வேந்தர்க்குக் கடனே' என்று இதனை வற்புறுத்தினர். திருமந்திரத்துள்ளும் 'நெறி நில்லாரை நெறி நிறுத்தல் வேந்தர் கடன்' என விதந்து பேசப்படுகிறது.

## எது பண்பாடு :

தவறுகளைத் திருத்தும் கடமைமிக்க அரசு, இவற்றை நடைமுறைப்படுத்தும்போது, அவரவர்கள் தகுதிக்கு ஏற்ப, சரியான அணுகுமுறைகளைப் பின்பற்றவேண்டும். இன்றேல் நல்லது செய்யும் முயற்சிகூடத் தீதாய் முடியும். 'நன்ருற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர், பண்பறிந்து ஆற்ருக்கடை.

எனத் திருவள்ளுவரும் எச்சரிக்கிறார். ஆட்சியாளர்கள் புனித மானவர்களிடமும் – புனிதமாகக் கருதத்தக்கவர்களிடமும் தவறுகள் இருப்பதாகக் கருதுவார்களானால் – அவற்றைத் திருத்த, பண்பாடான வழிமுறைகளையே மேற்கொள்ளல் வேண்டும். உலகம் நல்ல பண்புடையார் வாழ்வதாலேயே நிலைபெற்றிருக்கிறது என்பார் திருவள்ளுவர். "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அதுஇன்றேல், மண்புக்கு மாய்வதுமன்" என்பது அவர் தம் அருள்வாக்கு. 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்' என்றது நெய்தற்கலி. 'பாடு' என்பது பெருமை. இங்கே பெருமை என்பது ஆட்சியாளர்களைப் பொருத்தவரை, தன்னிலையிலிருந்து தாழாமையையும், பிறரை அவர் நிலைமையிலிருந்து தாழ்த்தாமையையும் குறிக்கும். இதனை உணர்ந்தே தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் நாட்டு மக்களுக்குக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றமூன்று நெறிகளைவற்புறுத்தினார். இதில்வரும் கண்ணியம் என்ற சொல்லுக்குப் பண்பாடு போற்றுதல் என்றே பொருள். ஆயின், அண்ணாதுரை அவர்கள் வழியில் செயல்பட்டுவரும் இன்றைய ஆட்சியாளர்கள், குறிப்பாக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு. திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசிவரும் பேச்சுக்களும், விடுத்துவரும் அறிக்கைகளும் மாறாகவே தோன்றுகின்றன.

**நமது கடமை :**

சமூகப் பண்பாடுகளும் நல்லொழுக்கங்களும் வெறும் சட்டங்களால் மட்டும் பராமரிக்கப்படுவன அல்ல. நாட்டு மக்கள் உள்ளத்தில் இவை நிலவ நமது சமயங்களும் – சமய நூல்களும் – சமய நெறிகாட்டும் சான்றோர்களுமே வழி வகுத்து உள்ளனர். கடவுளே ஒருவர் இல்லை என்றாலும் – நான் கற்பனையாகவாவதுஒருகடவுளைப்படைத்துக்கொள்வேன்என்றுபிரஞ்சு நாட்டு அறிஞர் ஒருவர் கூறியது இங்கே நினைவுகூரத்தக்கது. இவ்வாறு சமூக பண்பாட்டுக்கு உதவும் அறநிலையங்களையும், இவற்றை நடத்திச்செல்லும் சான்றோர்களையும் பண்பாட்டு எல்லை கடந்து தாழ்வுபடப்பேசுவதும், விமர்சிப்பதும் நாட்டின் ஒழுங்குமுறைகளையும், கட்டுப்பாடுகளையும், சீர்குலையச் செய்து விடும். எனவேபொறுப்பான அமைச்சரவர்கள் பண்பாட்டிற்குப் புறம்பாகப் பேசுவது அழகாகுமா? என்பதை எடுத்துக் கூறவேண்டிய கடமையும் பொறுப்பும் "ஞானசம்பந்தத்திற்கு" உண்டு. தற்போது எழுந்திருக்கும் புதிய நிலைமைபற்றி அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டுவது இன்றியமையாக் கடமையாகும்.

## வாரியம் – இலாகா ஆயிற்று

தமிழ்நாட்டில் காலங்காலமாக நிலவிவரும்–திருக்கோயில்கள் – மற்றும் திருமடங்கள் இவற்றின் பரிபாலனம்பற்றி 1927 முதல் இந்து சமய அறநிலையத்துறை சட்டம் ஒன்று இருந்துவருகிறது. காலத்திற்கு ஏற்றவாறு இச்சட்டம்–அவ்வப்போது பல திருத்தங்கள் செய்யப்பட்டு இதுவரை அமுலில் உள்ளது. ஜனநாயக உணர்வு அதிகம் வளர்ச்சிபெற்றிராத ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே, இச்சட்ட அமலாகத்திற்கு ஒரு குழு (வாரியம்) அமைக்கப்பட்டு அதனிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனல் ஜனநாயக உணர்வுகள் மேலோங்கிச் சிறந்திருக்கும் இக்காலத்தில் இச்சட்ட அமலாக்க உரிமை, குழுவிடமிருந்து மாற்றப்பெற்று இலாகாவின் தனி நபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதுஜனநாயகத்திற்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும் ஏற்றதாகுமா? என்பதைச் சிந்திக்கச்செய்யவேண்டியது நமது கடமையாகிறது.

## அரசின் கசப்புணர்வு :

சில ஆண்டுகட்கு முன்பு ஆதீனங்களின் பராமரிப்பில் பல நூற்றுண்டுகளாக இருந்து, செம்மையாகப் பராமரிக்கப் பட்டுவரும் திருக்கோயில்களின் நிர்வாக உரிமையில் குறுக்கிடும் நோக்கில் அரசு ஒரு சட்டம் இயற்றியது. இதன்படி இக்கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் உரிமையை அரசு இலாகா பெற்றது. இதன் அடிப்படையில் ஆதீனத் திருக்கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கமுற்பட்டார்கள். நிர்வாக அதிகாரிகளை என்னஎன்ன காரணங்களுக்காக, எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் நியமிக்கவேண்டும் என்று ஏற்கனவேஉள்ள சட்ட விதிகளுக்குப் புறம்பாக, எவ்விதமான காரணங்களும் கூறப்படாது இந்நியமன முயற்சியை அரசு மேற்கொண்டது. திருமடங்கள் நீதிமன்றத்தை அணுகித் தடைகோரியது. சட்ட நியாயம் இவ்வாறுன நியமனத்திற்கு இடந்தாராததால், சென்னை உயர்நீதி மன்றம் அரசின் இந்த நியமன உத்தரவுகளுக்கு இடைக்காலத் தடைவிதித்தது. அரசு இன்றுவரை தங்கள் நியமன உத்தரவுக்கான சரியான காரணங்களை நீதிமன்றத்திடம் கூறி அந்தத் தடை உத்தரவை விலக்கிக் கொள்ளாமல் இருந்துவருகிறது. திருமடங்கள், மேற்கண்ட நடவடிக்கைகளை நீதிமன்றத்தை அணுகி விலக்கிக் கொண்டதால், அரசுக்கு இந்நிறுவனங்களிடையே ஒரு கசப்புணர்வு நீடித்துவருகிறது.

## தரக்குறைவான விமர்சனங்கள் :

வெளிப்படக் கூறமுடியாத இந்தக் கசப்புணர்வின் வெளிப்பாடாகத் தமிழ்நாட்டுப் பண்பாட்டு நிலையங்களான

திருமடங்களின் மேலும், இவற்றின் தலைவர்களின் மேலும் கடுமையான குற்றச்சாட்டுக்களைப் பொது மேடைகளில் கூறும் முறைமையை அரசு மேற்கொண்டது. எதுபற்றி எங்கே பேசவேண்டுமென்று நன்கு தெரிந்திருந்தும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், இவற்றைப்பற்றித் தரக்குறைவான விமர்சனங்களில் ஈடுபடத் தொடங்கினர்கள். இப்பேச்சுக்கள் நாளேடுகளில்– அவற்றின் விருப்புவெறுப்புக்கு ஏற்பத் தலைப்புச் செய்திகளாக வெளிவரலாயின. மதச்சார்பற்ற அரசின் – அறநிலையத்துறைக்குப் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சரவர்கள் எல்லா நிலையினருக்கும் உரிய பிரதிநிதியாக நின்று பேசாது, ஒரு அரசியல்வாதிபோல் நின்று பேசிவரும் முறை நாட்டுமக்களுக்கு நன்மைபயப்பதாகத் தோன்றவில்லை.

**சிந்தித்தல் நல்லது :**

பொதுவாக எந்த நிறுவனங்களிலும் – சிலநேரங்களில் சில குறைகள் நேர்ந்துவிடுவது உண்டு. காந்தியடிகளே ஒருமுறை ‘ நான் இமாலயத்தவறு செய்துவிட்டேன் ’ என்று கூறியுள்ளார். இன்று அரசியலில் ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்று மற்றென்று பற்றிக் கூறிவரும் குறைபாடுகளை அனைவரும் அறிவர். மனிதர்களால் நடத்தப்படும் எதிலும் குறைகள் நிகழ்வது இயற்கையே. இவ்வாறு இருக்க, எங்கோ, ஏதோ நடந்துவிட்டிருப்பதாகத் தமக்குக்கிடைத்த தகவல்களைமட்டும் ஆதாரமாகக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாறு பேசிவருவது யாருக்கும் பெருமை தருவதாகாது. புனிதமானவர்களை – புனிதமாகக் கருதத்தக்கவர்களை மதிப்புக் குறைவாகப் பொதுகூட்டங்களில் பேசுவது நாட்டுக்கு எவ்வகையிலேனும் நலம் தருமா என்பதை நாட்டுமக்களும், நல்லறிஞர்களும், நலமிகு அமைச்சர்களும் அமைதியாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுவது கடமையாகும்.

**வருந்தத்தக்க அவசரத் திருத்தம் :**

இந்த நிலையில் அவசர அவசரமாக இந்துசமய அறநிலையச் சட்டத்திற்கு, நடந்து முடிந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் ஒரு திருத்தம்கொண்டுவரப்பட்டு இருசபைகளிலும் நிறைவேற்றபட்டிருக்கிறது. சட்ட வாசகங்கள் மக்கள் கருத்துக்கு விடப்பட்டு – அவர்கள் கருத்தறியப்படுவதற்கு முன்னரே திருத்தம் பெரும்பான்மை பலங்கொண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவரை இருந்துவந்த சட்டத்தில் நீதி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமையை இத்திருத்தம் மாற்றி, இந்துசமய அறநிலையத்துறை ஆணையருக்கு வழங்குகிறது. 1927 – ஆம் வருட அறநிலையச் சட்டம் அறநிலையங்களிடம் தவறு காணப்பட்டால், ஆணையர் நீதிமன்றங்களில்

வழக்குத் தொடர்ந்து பரிகாரம் காண வகைசெய்திருக்கிறது. 1927 முதல் இந்த அவசரத் திருத்தம் கொண்டுவரப்பட்ட நாள் வரை ஒருமுறையேனும் – எவர்மீதும் நீதிமன்ற வாயிலாக நடவடிக்கை ஏதும் எடுக்க எந்த அரசும் முயன்றதில்லை. காரணம் அறநிலையங்களின்மீது நீதிமன்றத்திடம் நடவடிக்கை மேற்கொள்ள – தக்க காரணங்கள்காட்ட அரசு இலாகாவிற்கு இயலவில்லை. எனவே, அந்த ஆதங்கத்தால் நீதி மன்ற உரிமைகளை மாற்றித் தனிநபர் ஒருவரிடம் – அறநிலைய ஆணையரிடம் – நடவடிக்கை எடுத்துத் தீர்ப்பு வழங்கும் உரிமையை ஜனநாயக மரபுகளுக்கு முரணாக அரசு வழங்கியுள்ளது. குற்றம் சாட்டுபவரும் ஆணையரே – அதனை விசாரணைசெய்பவரும் ஆணையரே – அதற்குத் தீர்ப்பு வழங்குபவரும் ஆணையரே என்ற இந்த விந்தையான போக்கினை எதிர்த்துப் பல உறுப்பினர்கள், இம் மசோதாவை வல்லுநர் குழுவிடம் ஒப்படைக்கக்கோரியும் அரசு இவற்றைப் பொருட்படுத்தாது பெரும்பான்மை பலத்தால் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றியுள்ளது பெரிதும் வருந்தத் தக்கது.

**வேண்டுகோள் :**

1927–ஆம் ஆண்டு மூலச் சட்டத்திற்குப் பலமுறை திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஜனநாயகம் வேரூன்றி வளர்ந்துள்ள நிலையில் நீதி மன்றத்திற்கு இருந்துவந்த வாரிசு உரிமை, சொத்துரிமை போன்ற பாத்தியங்களைப்பற்றி ஆய்ந்து முடிவு கூறும் உரிமையை அறநிலையத்துறை ஆணையருக்கு வழங்கியுள்ளது ஒரு ஜனநாயக அரசுக்கு எவ்வாறு பொருந்தும் என்று விளங்கிக்கொள்ள இயலவில்லை. அறநிலையங்களின் மரபினையும், இதன் புனிதத் தலைமையை வழிவழியாக நிர்வகித்துவரும் சான்றோர்களையும், நீதிக்குப்புறம்பாகக் கட்டுப்படுத்தும் இந்தச் சட்டத்திருத்தத்திற்கு மாட்சிமைதங்கிய ஆளுநர் அவர்களும், மாண்புமிகு. குடியரசுத் தலைவர் அவர்களும் அங்கீகாரம் அளிக்கமாட்டார்கள் என்று திடமாக நம்புகிறது ஞானசம்பந்தம். ஜனநாயகத்தில் நாட்டமுடைய பொதுமக்களும், சமய நிறுவனங்களின் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட அன்பர்களும் கடிதவாயிலாகவும், தந்தி வாயிலாகவும் இந்த அவசர மசோதாவுக்கு அங்கீகாரம் வழங்கக்கூடாது என்று ஆளுநர் அவர்களையும் ஜனாதிபதி அவர்களையும் கேட்டுக்கொள்ளும்படி “ஞானசம்பந்தம்” வேண்டுகோள் விடுக்கிறது.

இவ்வகையில் புரட்சித்தலைவரும், பொன்மனச்செம்மலுமாகிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவற்றைக் கருத்தில்கொண்டு இந்த மசோதாவை மறுபரிசீலனைசெய்து திரும்பப் பெறுவார்கள் என்று நம்புகிறோம். ஆவனசெய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

வாழ்க நீதிநெறி! வளர்க அறநிலையம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில்

ஆதீனத்திருமடத்தில் நடைபெற்ற

**பிரார்த்தனைக் கூட்டத்தில் வழங்கியருளிய**

# ஆசியுரை

21—6—1981

ஐம்புல உணர்வுகளுக்கு மேலாக - ஆறுவதாக மனிதர்களுக்கு மன உணர்வு சிறந்திருக்கிறது. இந்த மனஉணர்வு காரணமாகவே 'மனிதன்' என்ற குறியீடும் அமைந்தது. உலகப்பற்றிலிருந்து இறையடியைச் சென்று சேர்வதற்குரிய கருவிகளாகிய படி முறைகளையே நமது சாத்திரங்கள் தத்துவங்கள் என்று கூறும். அவை முப்பத்தாறு. இம்முப்பத்தாறனுள் ஒன்றாக - சிறப்பாக உட்கருவிகள் (அந்தக்கரணங்கள்) நான்கில் ஒன்றாக இம்மனம் பேசப்பட்டுள்ளது. இம்மனத்தின் தூய்மையே ஒரு மனிதனை உயர்த்தும். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றார் வள்ளுவர். மன நலத்தின் சிறப்போடு, மனிதனை உருவாக்கும் பணியில் அவன் சார்ந்திருக்கும் இன நலமும் பெரும்பங்கு வகிக்கிறது. மன நலத்திலும் இன நலத்தின்பங்கு பெரிது. இதனை,

" மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம் ; இனநலம்
எல்லாப் புகழும் தரும் "

எனத் திருவள்ளுவரும் உணர்த்தியுள்ளார். மன நலம் உயிர்களுக்கு ஆக்கத்தை (செல்வத்தை) மட்டுமே வழங்கும். இன நலமோ பல்வேறு வகைப்பட்ட புகழ்களையும் வழங்கும்என்பது குறள் நோக்கு. மன நலம் உடையார்க்கே இன நலமும் சிறக்கும். இதேபோல் ஒருவன் மன நலம் சிறக்க இன நலமும் காரண மாகிறது. எனவே மனநலமும், இன நலமும் இணைந்தால்தான்

ஒரு மனிதனின் வாழ்வு சோபிக்கும் – சிறக்கும் என்பதுவிளங்கு கின்றது. தன்னியல்பில் சுவையோ, நிறமோ, குணமோ இல்லாதமழைநீர்,நிலத்தில் விழுந்தபிறகு நிலத்தின் இயல்பையே தன்னியல்பாகக் கொள்ளும், இதுபோல் தூய அறிவும் சார்ந்திருக்கும் இனத்தின் இயல்புக்கு ஏற்பவே மாறும் என்பர்.

" நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு "

எனவே, மனநலத்தைப் பாதுகாக்க இனநலம் தேவை என்பதனை நன்கு உணருகின்றோம்.

இனநலம் என்பது இங்கே நல்லார் இணக்கத்தையே குறிப் பதாகும். நல்லாரின் இணக்கமும், நல்லினச்சார்பும் மனிதர் களுக்கு இன்றியமையாதது. இவ்வாறான நல்லினத்தாரையே 'ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்' எனச் சங்க இலக்கியங்களும், 'பெரியார்' எனத் திருக்குறளும் குறிக்கும். நமது ஆதீனத்தில் இச்சான்றோர் கூட்டத்தைத் 'திருக்கூட்டம்' எனக் குறித்தல் மரபு. மிக எளியவர்களிலிருந்து, இறையருள் பெறும் தகுதிமிக்க பெரியோர் வரை அனைவருக்கும் இச்சான்றோர் இணக்கம் இன்றியமையாதது. 'மால் அற நேயம் மலிந்தவர் வேடமும் – ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' எனச் சிவஞானபோதமும் இக்கருத்துக்கு அரண் செய்கின்றது. இப்பெரியார் திருக்கூட்டத்தையே 'சத்சங்கம்' என வடமொழி யிலும் குறிப்பர். இச்சொல், உண்மைப் பொருள் பற்றியே சிந்திப்பார் கூட்டம் என்ற பொருள் தரும். இங்கே உண்மைப் பொருள் என்பது இறை, உயிர், தளை என்றமுப்பொருள்களையே யாகும் இவற்றைச் சிந்தித்து இறைவனிடம் ஈடுபாடு கொள்ள உதவுவதே இக்கூட்டத்தின் நோக்கம்.

உயிர் பளிங்கு போன்றது. அருகில் இருக்கும்பொருள்களைத் தன்னுள் கொண்டு பிரதிபலிப்பது. இதனைச் 'சார்ந்ததன் வண்ணமாதல் உயிர் இயல்பு' என நமது சாத்திரங்கள் பேசும். எனவே, இவ்வுயிர் நல்லார் இனத்தில் சார்ந்திருந்தால் நன்கு வளரும். பேரின்பப்பெருவாழ்வும் பெறும். இத்தகு சான்றோர் கூட்டுறவைப் பெறவேண்டுமென்றே நமது அறநூல் ஆசிரியர் களும், அருள்நூல் ஆசிரியர்களும் பலவாறுவற்புறுத்தியுள்ளனர். 'அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்' என மாணிக்கவாசகர் சிவபெருமானை வேண்டுகின்றார். ஔவை யார் நல்வழியுள், 'நல்லாரைக்காண்டல்,நல்லார்சொல்கேட்டல், நல்லார் புகழ் பேசுதல், நல்லார் இணக்கம் யாவும் தேவை' என வற்புறுத்துகின்றார்.

" நல்லாரைக் காண்பதும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே ; நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று "

என விதந்து பாராட்டினர். இவரது இப்பாடலுக்கு முன்னேடியாக நமது அருள்நூல்களுள் ஒன்ருகிய திருமந்திரத்திலும் ஓர் பாடல் உள்ளது. நல்லார் என உலகியலில் ஒளவையார் கூறுவதையே நமது அருள்நூல்கள் ஞானசிரியனைப் போற்றி உரைக்கும். ஞானகுருவின் தரிசனம், அவர் புகழ்பேசுதல், அவர் அருள்மொழி செவிமடுத்தல், அவர்களையே சதாகாலமும் சிந்திப்பதன் மூலம் அவர்களோடு கருத்தால் இணைந்துவாழ்தல் என்பனவற்றைத் திருமந்திரம்,

" தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே."

என நுட்பமாக விளக்கியருளியது.

சான்ரேர் இணக்கம் பூரணபலன் தரவேண்டுமானல் தீயாரோடு தொடர்பில்லா திருத்தல்வேண்டும். இதனைவற்புறுத்தவே, ஒளவையார் 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்பதனேடு நிறுத்திக்கொள்ளாது உடனேயே தீயர் தொடர்புகளை அறுத்தல்வேண்டுமென்று அடுத்து ஒருபாடலை அமைக்கிருர்.

" தீயாரைக் காண்பதுவும் தீதே ; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே ; தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே ; அவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது."

என அழகுபெறப் பாடியுள்ளார். முதற்பாடலில் நலம்மிக்க நல்லார் என்ருர். நல்லாரோடு இணைந்தால் நமக்கு நலம்மிக்கு வரும் என்றவர் தீயாரைக்குறிக்கும்போது திருவற்ற தீயார் என்ருர். தீயர் இணக்கம் கல்வி, செல்வம் முதலியவற்றையும் இழப்பிக்கும் என்பது ஒளவையின்குறிப்பு. இவ்வகையிலேயே பெரியாரைத்துணைக் கோடல் என்ற அதிகாரம் அமைத்து நல்லோர் இணக்கத்தால் பெறப்படும் சிறப்பினைக் கூறிய திருவள்ளுவரும் உடனே சிற்றினஞ் சேராமை என அடுத்த அதிகாரம் அமைத்து, இவ்விணக்கத்தால் வரும் தீமைகளை நினைவூட்டி எச்சரிக்கிருர்.

நல்லார் இணக்கமும் – நல்லார் உறவும் நம்மை, நமது உயிரை, மனத்தை, உணர்வுகளைத் தூய்மைப்படுத்தி நலம் பயக்கும் என்ற நோக்கிலேயே சான்றோர் பலரும் இவ்வாறு அருளிச்செய்வாராயினர். இதனையே ஆதிசங்கரரும்,

" சத்சங்கத்தால் பற்றின்மை ஏற்படும்,
பற்றின்மை ஏற்படுவதனால்
வாழ்வியல் மயக்கம் நீங்கும்; மயக்கம்
நீங்குவதால் மனம் ஒருமித்தநிலை அடையும்.
மனம் ஒருமித்த நிலை அடைந்தால்
ஜீவன் முத்தி கிட்டும்."

என்ற கருத்தமைந்த

" ஸத்ஸஸ்கத்வே நிஸ்ஸங்கத்வம்;
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்;
நிர்மோஹத்வே நிச்சலதத்வம்;
நிச்சலதத்வே ஜீவன்முத்தி."

என்று அருளியுள்ளார்.

எனவே, இவ்வாறான பெரும் பேறுகள் பலவற்றையும் வழங்கும் சத்சங்கத்தின் பெருமை கருதியே ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்றத்தின் அன்பர்கள் திங்கள் தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை காலையில் தருமையில் ஒன்றுகூடி, பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கேற்றுத் திருவருள் பெறமுயல்கிறார்கள். திருவள்ளுவர் அருளிச்செய்தது போல் பெரியோர் இணக்கம் ஒருவனுக்கு அரியவற்றுள் எல்லாம் அரியபேறாக விளங்குவது; இதுவே வன்மையுள் எல்லாம் தலையாயது; இத்தகு சான்றோர் கூட்டத்தில் இணங்கியிருப்பாரைச் செற்றார் செய்யவல்லது ஏதும் இல்லை என்றெல்லாம் பலவாறான சிறப்புக்களைத்தரும். சத்சங்கப்பெருமை அறிந்து அன்பர்கள்பலரும் இங்கே கூடி இருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது. ஏனையோரையும் இவ் வகையில் ஈடுபடுத்துவது வேண்டத்தக்கது. இங்கே பிரார்த்தனைக் கூட்டத்தில் நல்லோர் இணக்கம் பெற்றிருக்கும் அன்பர்கள் அனைவர்க்கும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் பெருகச் சிந்திக்கின்றோம்.

நல்லோர் நாளும் பெருகுக.

நல்லவை நாளும் ஓங்குக.

# ★ சிவநாமாவளி இசைப் பாடல் ★

திருமுறைக்கலாநிதி

**வேளூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்**

இராகம் - சுத்தசாவேரி ] [ ஆதிதாளம். சதுஸ்ர நடை.

ஓம்நமசிவாய சிவாயநமஓம்
ஓம்நமசிவாய சிவாயநமஓம் ( ஓம் )

1. ஓம்நமசிவாய எனமொழிவாயே
ஓங்குபுகழொடு உலகில்வாழ்வாயே ( ஓம் )

2. ஆனைமுகன் ஆறுமுகன் தகப்பன்
ஆனஞ்சுகந்து ஆடும்அரன் ( ஓம் )

3. அன்புடையார்க்கு அன்புடையன்
அபயம்தந்தாளும் அண்ணலவன் ( ஓம் )

4. கூற்றுதைத்தவன் குணக்குன்றன்
குறைவிலாதவன் கோள்நீக்குவன் ( ஓம் )

5. தந்தைதாயவன் தன்னொப்பிலான்
சங்கரன் மங்களம் தந்தருள்வன் ( ஓம் )

6. நித்தமணாளன் நிறைசெல்வன்
நித்தம் நினைவார்வினை நீக்குவன் ( ஓம் )

7. மாதொருகூறன் மழவிடையன்
மண்ணில் நல்லவாழ் வளிப்பவன் ( ஓம் )

8. கரியுரித்தவன் கறைக்கண்டன்
காமனை எரித்த கங்காதரன் ( ஓம் )

9. வெந்தழல் உருவன் வெண்ணீற்றன்
வேதப்பொருளன் வெந்துயர்களைவன் ( ஓம் )

10. ஏழேழ்உலகு ஏத்தும் இறைவன்
எந்நாளும் இன்பம் தரும்ஈசன் ( ஓம் )

11. சங்கம் அமர்ந்தருள் தமிழ்ப்புலவன்
தமிழிசையுகக் கும்சதாசிவன் ( ஓம் )

12. அம்பலவன்ஆதி அந்தமிலான்
அம்மையப்பன் அவன் அஞ்செழுத்தன் ( ஓம் )

# கவிதை அலைகள்

பேராசிரியர். திரு. வ. பெருமாள்
எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்., எப். எப். ஐ.,
தலைமைப் பேராசிரியர்,
தலைமை ஆராய்ச்சி நெறியாளர், பண்பகம்,
சொர்ண நகர், ராபர்ட்சன்பேட்டை,
கோலார் தங்கவயல், (K. G. F.) 563 122 கருநாடக மாநிலம்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**கவிதைப்பொருள் :–**

கவிதை பாடுவதற்கெனத் தனியாக ஒரு பொருளில்லை. உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களையும் பற்றிய கட்டுரைகளைக் கலைக்களஞ்சியத்தில் காண்பதைப் போலக் கவிதையிலும் காணலாம். ஓர் எளியபறவையாகிய காக்கையைப்பாடிய காரணத்தால் ஒரு புலவர் 'காக்கைப் பாடினியார்' என்று பெயர் பெற்றார் என்பதை நாம் அறிகின்றோம். அணுமுதல் அண்டம்வரை எல்லாப் பொருள்களும் கவிதைக்குரிய பொருள்களே. கதிரவன், திங்கள், விண்மீன், தென்றல், மலை, குன்று, அருவி, ஆறு, ஏரி, குளம், கடல், தாமரை, கிளி, மயில், குயில், சுனை, சோலை, காடு, இடி, மழை, மின்னல், அன்பு, காதல், அழகு, இயற்கை, இறைவன் முதலிய மரபுத் தலைப்புக்களிலும் சீர்திருத்தம், புரட்சி, புதுமை, சிந்தனை, பகுத்தறிவு, விஞ்ஞானம், மறுமலர்ச்சி, கிளர்ச்சி, புதுயுகம், மகளிர் முன்னேற்றம், பெண் கல்வி, விதவை மணம், கலப்பு மணம், சாதி ஒழிப்பு முதலிய புதுமைத் தலைப்புக்களிலும் கவிதை இயற்றலாம்.

கவிதையை மலருக்கு ஒப்பிட்டால் கவிதைப் பொருளை மணத்திற்கு ஒப்பிடலாம். சொல்லால் வடிவம் பெற்றுப் பொருளால் கமழ்வது கவிதை. இவ்வுண்மையைப் பின்வரும் பாடல் தெளிவாக உணர்த்துகின்றது.

"சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலான் — மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்"

'எப்பொருளைக் குறித்துக் கவிஞன் பாடுகிறான்' என்று ஆராய்வதைவிட 'எப்படிப் பாடுகிறான்' என்று சிந்திப்பதே, உண்மையான இலக்கிய ஆராய்ச்சியாகும். மிக உயர்ந்த பொருளைப் பற்றியதாக இருந்தாலும் சுவையில்லாமல் உணர்ச்சியற்ற முறையில் பாடப்படுவது கவிதையாகாது. சுவை தோன்றவும் உணர்ச்சி ததும்பவும் மிகச்சாதாரணப் பொருளைப் பற்றிப் பாடும்போதும் அதுகவிதையாகிறது. தேசிக விநாயகம் பிள்ளை ஒரு முறை சிரங்குக்கு ஆட்பட்டார். மேனி முழுவதும் சிரங்கு மயமாயிருந்தது. ஒரு சிரங்கு முத்தைப் போலவும், இன்னொன்று பவழத்தைப் போலவும், மற்றுமொன்று முழு வயிரத்தைப் போலவும், வேறொன்று மாணிக்கத்தைப் போலவும் திகழ்ந்தன. இவையெல்லாம் சேர்ந்து நவமணி யாலானபதக்கம்போல் காட்சியளித்தன. கவிஞர், துன்பத்திலும் இவ்வாறு நகைச்சுவை தோன்றப்பாடியதுடன் இச்சிரங்குகளைத் தமக்கு வழங்கியவன் சிரங்கப்பராயன் என்று குறிப்பிட்டு நகைச்சுவைக்கு மேலும் உயிரூட்டுகின்றார்.

"முத்துப் பவழம் முழுவயிரம் மாணிக்கம்
பக்தியொளி வீசு பதக்கமெலாம் — சித்தன்
சிரங்கப்ப ராயன் சிறியோன் தனக்குத்
தரங்கண்டு தந்த தனம்"

மிக்ச் சாதாரண பொருளைப் பற்றிப் பாடினாலும் பாடுகின்ற முறையிலேதான் சுவை அடங்கியிருக்கின்றது.

"கொடியணி மாடமோங்கிக் குலவுசீ ரானைக் காவில்
படியினி லுள்ளார் செய்த பாக்கிய மனையான் செங்கைத்
தொடியினர் மதனன் சோம சுந்தரன் கடையிற் செய்த
பொடியினைப் போடா மூக்குப் புண்ணியம் செய்யா மூக்கே"

என்னும் தியாகராசச் செட்டியார் பாட்டு மற்றுமொரு எடுத்துக்காட்டாம். கவிஞனின் உள்ளத்தைத் தொடுகின்ற பொருளும் உள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்கும் பொருளும் கவிதைக்குரிய பொருளாகும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இயற்கை அழகைக் கண்டார். அவ்வழகு அவர் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சியளித்தது. அதனுடன் அஃது அவர் கவிதைக்குக் கருவூலமாகவும் அமைந்தது,

"காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்ட இடம்எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்!

மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள் "

" சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்ருள்
திருவிளக்கிற் சிரிக்கின்ருள் ; நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்ருள் ; அடடே ! செந்தோட்
புறத்தினிலே கலப்புடையான் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள் ; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தி ஞள் ; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள் "

பாரதிதாசன் தாம் கண்ட அழகுக் காட்சியே அவர்க்குக் கவிதைப் பொருளாக அமைந்தது என்பது இங்கு நோக்கத் தக்கது.

கவிதையை உணவிற்கு ஒப்பிட்டால் கவிதை நயத்தை உணவிலுள்ள சுவைக்கு ஒப்பிடலாம். சுவை மிகுந்த உணவை மக்கள் விரும்பியுண்பதைப்போல நயம்செறிந்த கவிதையைக் கற்ருேர் உவகையுடன் பயில்வர். தமிழ்க் காப்பியங்களிலும் இலக்கியங்களிலும் கவிதை நயம் அங்கிங்கெனுதபடி எங்கும் திகழ்கின்றது. சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி. மதுரை மாநகரில் ஆயர்பாடியில் இடைக்குல மடந்தையொருத்தியின் அடைக் கலமாகக் கோவலனும் கண்ணகியும் இருக்கின்றனர். கோவலன் தன் குற்றத்திற்காகவும் கண்ணகிக்கு இழைத்த தீமைக்காகவும் மிகவும் மனம் வருந்திக் கண்ணகியை நோக்கி, ' உன் இரண்டு சிலம்பில் ஒன்றை எடுத்துக்கொண்டு போய் மாறி ( விற்று ) வருகிறேன் ' என்று கூறுகின்ருன்.

" சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென "

ஆனல், நடந்தது என்ன ? சிலம்பை எடுத்துக் கொண்டு மனிதனுகச் சென்றவன் பிணமாக மாறினன். ' மாறி ' என்னுஞ் சொல் அமங்கலச் சுவை தோன்ற விளங்குகின்றது.

கம்பராமாயணத்தில் ஒரு காட்சியைக் காணலாம். காட்டிற்குச் சென்ற இராமன் அகத்தியரைக் கண்டு வணங்கு கிருன். தமிழ் முனிவராகிய அகத்தியர் இராமனை அன்புடன்

அணைத்து இன்னுரை கூறி வரவேற்கின்றார். அகத்தியர் பெரியவர்; தமிழ் முனிவர்; சான்றோர். ஆனால், உருவத்தில் குள்ளமானவர். இராமனே அகத்தியரைவிட உயரத்தால் பெரியவன். இராமன் உயரத்தில் நெடியவன் என்பதையும், அகத்தியர் குள்ளமானவர் என்பதையும், குறிப்பிட விழைகின்றார் கம்பர். இராமன் உயரமானவன் என்று குறிப்பிட்டு விடலாம். அதில் எந்தவிதமான சங்கடமோ, கடினமோ இல்லை. ஆனால், அகத்தியரைக் குள்ளமானவர் என்று எவ்வாறு உரைப்பது? கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் ஆகிய எல்லாவற்றிலும் உயர்ந்தவராயிற்றே அகத்தியர். அத்தகைய அகத்தியரைக் குள்ளமானவர் என்று குறிப்பிட்டால் அஃது அவர்க்கு இழுக்காக அமையாதா? ஆனால், அகத்தியர் குள்ள மானவர்என உறுதியாகக் கற்போர்க்கு உணர்த்த வேண்டும் என்பது கம்பர் விருப்பம். இந்நிலையில் கம்பர் 'நின்று கொண்டிருந்த அகத்திய முனிவரை அங்கு வந்த நெடியோனாகிய இராமன் வணங்கினான்' என்று கூறுகின்றார். 'இராமனை நெடியோன்' என்றும், அகத்தியரை 'நின்று கொண்டிருந்தவர்' என்றும் குறிப்பிட்டதால் நின்று கொண்டிருந்த அகத்தியர் குள்ளமானவர் என்பதைக் குறிப்பாகவும் உறுதியாகவும் உணர்த்திவிட்டார் கம்பர்.

"நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனும் அன்பொடு தழீஇயழுத கண்ணன்
நன்றுவரவு என்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமிழ் இயம்பிசை கொண்டான்"

இத்தகைய கவிதை நயம்வாய்ந்த பாடல்கள் கற்போர்க்கு மிக்க இன்பம் பயக்க வல்லன.

**ஒலியின்பம் :—**

**மெல்லொலி :—**

உணர்ச்சிக்கேற்ப ஒலியமைந்திருப்பதே கவிதையின் சிறப்பு. இடத்திற்கு ஏற்ற சொல் அமைந்திருப்பதே உயர்ந்த நடை. ("Proper words in Proper Places"—switt. Definition of a good style) மனிதன் இன்ப உணர்ச்சியுடன் மகிழ்ச்சி பொங்க இருக்கும்போது அவன் பேச்சில் மெல்லோசையும் இனிய ஒலியும் காணப்படும். அன்பு, அருள், உவகை, காதல், இரக்கம் முதலிய மென்மை உணர்ச்சிகளிடையே எழுகின்ற ஒலி எப்போதும் மெல்லொலியாகவே இருக்கும். சூர்ப்பணகை தன்னை ஒப்பனை செய்து கொண்டு மென்மை தோன்ற மிக அழகாக நடந்து வரும் இனிய காட்சியைக் கம்பர் தம் சொல்லோவியத்தில் காட்டுகின்றார்.

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்ச மகள் வந்தாள்"

இங்கு நாம் கம்பர் கவிதையை மட்டும் கற்கவில்லை. சூர்ப் பணகை நடந்து வருவதையே நம் அகக் கண்ணால் காணு கின்றோம்.

மற்றுமொரு நற்காட்சியைச் சீவகசிந்தாமணியில் காண் போம். முது பார்ப்பான் வடிவில் தண்டூன்றித் தள்ளாடிக் கொண்டு வரும் சீவகனை நோக்கிச் சுரமஞ்சரி இனிது நடந்து வருகிறாள். சிலம்பு ஒலிக்க, மேகலை மிழற்ற, வண்டுபாட, இவற்றிற் கேற்பச் சுரமஞ்சரி நடந்துவரும் அழகுக் காட்சியைத் திருத்தக்க தேவர் இனிது விளக்குகின்றார். இதுவே அக்காட்சி.

"சீறடி கிண்கிணிசி லம்பொடுசி லம்ப
வேறுபடு மேகலைகண் மெல்லெனமி ழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்பர் நடை கற்பதென வந்தாள்"

நடைக்கு ஏற்ற பாட்டையும் பாட்டுக்கு ஏற்ற சொல்லையும் உணர்ச்சிக்கேற்ற ஒலியையும் இங்கு நாம் காண்கின்றோம்.

(தொடரும்)

---

## சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்களென் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ?சக மேழுமளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

# இந்து மதத்திற்குத் திரும்பியவர்

## அறிக்கை

திருத்துறைப்பூண்டி தாலுக்கா குன்னலூர் கிராமம் மேலச் சேத்தியில் வசிக்கும் கணபதி வாய்க்காரர் மகன் **முகம்மது அப்துல்காதர்** என்கிற **ராஜாராமன்** ஸ்ரீ வேதாரண்யேசுவரர் திருக்கோயில் பரம்பரை தர்மகர்த்தா ஸ்ரீலஸ்ரீ ச. கதிர்காம பண்டாரசன்னதி அவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரி திரு. என். ஜெகதேவன் பி. ஏ., பி. எல். அவர்கள் முன்னிலையில் அருள்மிகு. வேதாரண்யேஸ்வரர் ஆலயத்தில் அருள்மிகு துர்க்கா பரமேஸ்வரி சன்னதியில் எனது பழைய பெயராகிய ராஜாராமன் பெயருக்கு அர்ச்சனை செய்து நிர்வாக அதிகாரி அவர்களின் பெரு முயற்சியில் காசியைவிட வீசம் கூட என வழங்கும் புனிதத்தன்மை வாய்ந்த மணிகர்ணிகை திருக் குளத்தில் புனித நீராடி எனது குடும்பத்தாரும் நானும் மனப் பூர்வமாக இந்து மதத்தில் சேர்ந்துவிட்டோம். இனிமேல் எப்போதும் இந்துவாகவே இருப்பேன். எனது குடும்பம் இந்து குடும்பமாகவே பழைய நிலைமையில் திகழும்.

நான் முஸ்லீம் ஆக மாறி அந்த மத நடவடிக்கைகளில் கடந்த ஓராண்டில் வழிபட்டு வந்தவரை நமது இந்து மதத்தை விட எந்த வகையிலும் முஸ்லீம் மதம் சிறந்ததாகத் தெரிய வில்லை. அகிலம் புகழும் நமது இந்து மதமே தூய்மையும் புனிதத்தன்மையுமுடைய மதமாகும். எனவே பண ஆசையின் காரணமாக முஸ்லீமாக மாற நினைக்கின்ற இந்துக்கள் யாவரும் தயவுசெய்து என்னைத் தொடர்ந்து இந்துவாகவே வாழவேண்டு மென்றும் நமது இந்து மதத்தின் பெருமையை உலகுக்கு நல்ல முறையில் நிலைநாட்டி, பரப்ப வேண்டுமெனவும் யாழைப்பழித்த மொழியம்மை சமேத அருள்மிகு. வேதாரண்யேஸ்வர சுவாமியைப் பிரார்த்திக்கின்றேன்.

வேதாரண்யம்,<br>
*8—8—81.*

(ஒ—ம்) **ஜி. ராஜாராமன்,**<br>
குன்னலூர்.

**கடிதம்:**

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருவடிகளுக்கு அநேக நமஸ்காரம்.

ஆண்டவன் அன்பர்கள் மூலம் அருள்பாலிக்கின்ருன் என்பதற்கு ஒரு சுவையான நிகழ்ச்சி. சில திங்களுக்குமுன் நான் மஹா சந்நிதானத்திடம் அன்பர் கி. வா. ஜ. அவர்களுக்கு உடல்நிலை சரியில்லைஎன்றும், வைத்தீஸ்வரன்கோயில் பிரசாதம் சந்நிதானத்தின் ஆசியுடன் அனுப்பவேண்டுமென்றும்கேட்டுக் கொண்டேன். அவ்விதமே பிரசாதம் அனுப்பப்பட்டது. அப்போது திரு. கி. வா. ஜ, அவர்களின் உடல்நிலை மிகவும் மோசமாகவும், மிகுந்த கவலைக்கிடமாகவும் இருந்ததாம். ஹிருதயத்திற்கு ரத்தம் கொண்டு செல்லும் குழாய் சரிவர இயங்காமல் அவருக்கு மூச்சுவிட முடியாமல் தவித்தாராம். உடனே சென்னையிலிருந்த பிரபல ஹிருதயநோய் சிகிச்சை வல்லுனர்களை அழைத்துவந்து காட்டினுர்களாம். அவர்கள் பலவிதமான சிகிச்சைகளையும்செய்து பலன்ஏற்படவில்லையாம்.

அவருடைய மூத்த மருமகளும், துணைவியாரும் மிகுந்த கவலையுடன், இனி டாக்டர்களை நம்பிப் பயன் இல்லை, பவரோக வைத்தியநாதர்தான் அப்பாவைக் காப்பாற்றவேண்டு மென்று கண்ணீருடன் பிரார்த்தனை செய்தார்களாம். கொஞ்ச நேரத்தில் மஹாசந்நிதானம் அனுப்பிய பிரசாதம் வந்துசேர்ந்த தாம். எப்போதும் அவருக்கு நிறைய தபால்வரும். அன்று ஒரேஒரு தபால்தான் வந்ததாம்! அதுவும் பிரசாதம்! உடனே அவர்கள் இருவரும் பிரசாதத்தை எடுத்து, கி. வா. ஜவுக்கு இட்டு, பிரார்த்தனை செய்தார்களாம். சிறிதுநேரத்தில் அவருக்கு மூச்சுவிடமுடிந்ததாம். உடனே டாக்டர்களை அழைத்துவந்து சென்னையில் உள்ள பிரபல H. M. Hospital இல் சேர்த்து ஒருவாரம் சிகிச்சை அளித்தார்களாம். இப்போது நன்ருக உள்ளார். வீட்டில் இருந்தால் பலபேர் பார்க்கவருவார்கள், தொந்தரவாக இருக்குமென்று திருவான்மியூரில் உள்ள அவர் தம்பி வீட்டில் இருந்தாராம். நேற்று இரவுதான் தன் வீட்டிற்கு வந்துள்ளார். இன்றுகாலை அவரைச்சென்று பார்த்தேன். நன்ருக உள்ளார்கள். மஹாசந்நிதானம் அவர்களின் அருளுக்கும் ஆசிக்கும் நன்றி தெரிவித்தார்கள். அவரால் எழுதமுடியாது ஆதலால் நான் எழுதுகிறேன்.

அன்று அவர் உடல்நிலை மோசமாக இருந்தது எனக்குத் தெரியாது. நான் என்னையும் அறியாமல் பிரசாதம் அனுப்ப

வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அப்பிரசாதமே அவரைக்காத்தது. இதுதிருவருள் அல்லாமல் வேறு என்னவாக இருக்கமுடியும்.

மேலும் மதாமாதம் அவர் நக்ஷத்திரத்திலும், அவர் மூத்த மகன் நக்ஷத்திரத்திலும் வைத்தீஸ்வரன்கோவிலில் விசேஷ அர்ச்சனை வைத்தியநாத சுவாமிக்குச் செய்து பிரசாதம்அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குரிய கட்டணத்தை நான்வரும்போது கொண்டுவருகிறேன். நான் இங்கிருந்து சேலம் செல்கிறேன். மாயூரம் 4 ம் தேதிவாக்கில் வருவேன். அதனுல் முன்பே எழுதிவிட்டேன். அவர்கள் வீட்டில் இந்த நிகழ்ச்சியைச் சொல்லும்போது என் உடல் புல்லரித்தது. எல்லாம் ஆண்டவன்செயல். இத்துடன் நக்ஷத்திரம் பெயர்விபரம் இணைத்துள்ளேன். மீண்டும் திருவடிகளுக்கு நமஸ்காரம்.

அன்பன்,

சென்னை-28 **என். ராமகிருஷ்ண**

---

## அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்ருத வளமையும் குன்ருத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவருத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாருத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணுத கோலும்ஒரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய் ;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமியே!

— அபிராமி பட்டர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்



ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

மாதர்மே மதுகைடபக்னி மஹிஷப்ராணுப ஹாரோத்தியமே
ஹேலா நிர்மித தூம்ரலோசனவதே ஹே சண்டமுண்டார்த்தினி |
நிஸ்சேஷீக்ருத ரக்தபீஜ தனுஜே நித்யே நிசும்பாபஹே
சும்பத்வம்ஸிநி ஸம்ஹராசு துரிதம் துர்க்கே நமஸ்தே (அ)ம்பிகே ||

தருமையாதீனம், வேளூர், மண்டலாபிஷேகக் கார்த்திகைவிழா



மின்விளக்கு அலங்கார வெள்ளிரதங்களில்
பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா.

தருமையாதீனம், சுதந்திரதின விழாவில் சமபந்தி போஜனம்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடன்
மாயூரம் கோட்டாட்சியர் எம். பி. நிர்மலா அவர்கள்

# திருப்பெருவேளூர், திருத்தலையாலங்காட்டுத் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,**

## 1. திருப்பெருவேளூர்

இத்தலம் கும்பகோணம் - திருவாரூர் பேருந்துச்சாலையில் குடவாசலுக்குக் கிழக்கே 12 கி. மீ. தூரத்தில் உள்ளது. மணக்கால் ஐயன்பேட்டை என வழங்கப்பெறுகிறது. பேருந் துச்சாலையிலிருந்து வடக்கே ¼ கி. மீ. தூரம் சென்றால் கோயிலை அடையலாம்.

இத்தலத்திற்கு அருகில் திருவிளமரும் திருக்கரவீரமும் திருத் தலையாலங்காடும் எண்கண் முருகன் தலமும் மற்றும்பலவைப்புத் தலங்களும் உள்ளன. சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 92 ஆவது தலம். பெருவேள் என்பவன் வாழ்ந்த ஊராதலின் பெருவேளூர்என இவ்வூர்வழங்கப் பெற்றதாகலாம். செவ்வேளாகிய முருகன் வழிபட்டதால் இத்தலம் பெருவேளூர் எனப்பெற்றது என்பது புராணவரலாறு.

### தலச்சிறப்பு:

கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்களில் ஒன்று. மோகினி வடிவமெடுத்த திருமால், அவதாரநோக்கம் ஈடேறிய பிறகு தன் பழைய ஆணுருவத்தைப் பெறவேண்டி வழிபட்ட தலம். திருமால்கோயில் இவ்வாலயத்தில் இடம் பெற்றுள்ளது. பிருங்கிமுனிவர் தவமிருந்து இறைவனது அருட் காட்சி கண்டருளிய சிறப்புடையது. அம்பிகை இராஜராஜேஸ் வரியாய் அமர்ந்த நிலையில் விளங்கும் பெருமை உடையது. கௌதமர் முதலியோர் வழிபட்டது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசர் அருளிய திருப் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு

உள்ளன. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் இரண்டாம் திருமுறையில் 39 வது பதிகத்தில் ஐந்தாம் பாடலிலும், திருநாவுக்கரசர் அருளிய தேவாரம் ஆறும் திருமுறையில் 25 ஆம் பதிகத்தின் பத்தாம் பாடலிலும், 70 ஆம் பதிகத்தில் ஆறும் பாடலிலும், சுந்தரர் அருளிய 7 ஆம் திருமுறை 12 ஆம் பதிகத்தின் 8 ஆம் பாடலிலும் 31 ஆம் பதிகத்தின் 9 ஆம் பாடலிலும் இத்தலம் குறிப்பிடப்படுகிறது.

## கோயிலமைப்பு :

பெருவேளூர் அழகியசிறியகிராமம். கோயில்கிழக்குநோக்கி உள்ளது. மாடக்கோயில். மூன்று நிலைகளுடன் இராஜகோபுரம் நன்கு திருப்பணி செய்விக்கப்பெற்று அழகிய நிலையில் காட்சி தருகிறது. இராஜகோபுரத்தைக் கடந்தவுடன் மலைக்கோயிலை வலம்வரும் பிராகாரம் உள்ளது. கொடிமரம் நந்தி பலிபீடங்கள் சந்நிதியில் உள்ளன. வெள்ளைவிநாயகர் கொடிமரமேடையில் எழுந்தருளிக்காட்சி தருகிறார். இறைவன் சந்நிதியில் மலையின் அடிப்பகுதியில் விநாயகர் விளங்குகின்றார்.

பிராகாரத்தில் தென்மேற்குத் திசையில் தலவிநாயகர் விளங்குகின்றார். அவர் கோயிலை அடுத்துப் பழமையான தலமரம் வன்னி உள்ளது. அடுத்து திருமால், திருமகள் நிலமகள் ஆகியோருடன் எழுந்தருளிய கோயில் உள்ளது. அடுத்து முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை அம்மையோடு காட்சிதரும்கோயில் உள்ளது. மேற்கே சுற்றுச்சுவர் மண்டபத்தில் அழகியதிருமகள் திருவுருவம் உள்ளது. வடமேற்கே சுவாமிக்கு இடப்பாகத்தில் அபின்னையாய் இறைவனது பாகம்பிரியாளாகிய அம்பிகைகோயில் உள்ளது. அம்பிகை இருந்த திருக்கோலத்தில் விளங்குகிறார். வலமாகவந்தால் கீழைப்பிராகாரத்தில் பைரவர் சூரியன் சந்திரன்சமயாசாரியர் மற்றும் பல சிவலிங்கங்கள் உள்ளன. நவக்கிரகங்கள் தனியே பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளன.

கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோற்பவர் இருக்குமிடத்தில் பிருங்கி முனிவர், வடக்கே பிர்மா, தனிமண்டபத்தில் துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேசுரர் தனிக்கோயிலில் உள்ளார். வலமாகவந்து மலைக் கோயிலை அடைவோம். மலை, சோமஸ்கந்தர் சுவாமி விமானங்களுடன் வானளாவி விளங்குகிறது. மலைமேல் படிக்கட்டுக்களில் ஏறியவுடன் இறைவன் சந்நிதிக்குத் தென்புறத்தில்

இறைவன் பெண்ணின் நல்லாளொடும் கூடியபெருந்தகையாக முருகனை இடையில் நிறுத்தி அம்மையப்பராய்க் காட்சிதரும் திருக்கோலமாகிய அழகிய சோமாஸ்கந்த மூர்த்தத்தைத் தரிசிக்கலாம். பெரிய திருவுருவம். வழிபட்டு இறைவனது சந்நிதியை அடைவோம்.

சுவாமிகோயில் மகாமண்டபம் அர்த்தமண்டபம் கர்ப்பக் கிருகம் ஆகிய மூன்றுமண்டபங்களோடு உள்ளது, மகா மண்டபத்தில் நடராசர் விளங்குகிறார். துவாரபாலகர்களை வழிபட்டு அர்த்தமண்டபத்தை அடைந்தால் பஞ்சமூர்த்திகளை வழிபடலாம். இடைநாழிகை எனப்படும் அர்த்தமண்டப வாயிலில் நின்று பெருமானை வழிபடுவோம். சதுரமான ஆவுடையாரில் இறைவனது சிவலிங்கத்திருமேனி அருட்காட்சி தருகிறது. வழிபட்டு நெஞ்சுருகிநின்று

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்
பரிவினால் பெரியோர் ஏத்தும் பெருவேளூர்ப் பற்றினானை
மருவிநான் வாழ்த்தி உய்யும்வகையது நினைக்கின்றேனே"

என அப்பரடிகள் இத்தலத்து இறைவர் மேற்பாடியபாடலையோ இத்தலத்து இறைவர் மேல் ஞானசம்பந்தரும் அப்பரும் பாடிய பிறதேவாரத் திருப்பாடல்களையோ ஓதி வழிபட்டு இறங்கி மலையை வலமாகவந்து அம்பிகை கோயிலை அடைவோம். அம்மை இருந்தகோலத்தில் அருட்காட்சி வழங்குகின்றார். மகா மண்டபம், அர்த்தமண்டபம், கர்ப்பக்கிருகம் ஆகியவற்றோடு கோயில்விளங்குகிறது. தூய்மையும் புதுமையும் உடையதாக உள்ளது.

### மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு பிரியாஈசுரர். வடமொழி யில் அபிமுகேசுரர் என வழங்கப்பெறுகிறார். அம்பிகை திருப் பெயர் அருள்மிகு ஏலவார்குழலி. வடமொழியில் அபின்னாம் பிகை என வழங்கப்பெறுகிறார். தலமரம் வன்னி. தீர்த்தம் சரவணப்பொய்கை. இது கோயிலின்பின்புறம் உள்ளது.

### கோச்செங்கட்சோழர் :

முற்பிறவியில் சிலந்தியாயிருந்து திருவானைக்காவிலுள்ள இறைவனிடம் பக்திசெய்து வழிபட்ட சிவபுண்ணியத்தால்

கோச்செங்கட்சோழ மன்னனுகப் பிறந்தவர். முற்பிறப்பில் யானை, தான்செய்த தொண்டிற்கு ஊறுவிளைத்ததை எண்ணி இறைவனுக்கு யானைஏருத எழுபது மாடக்கோயில்களைத் தமிழ் நாட்டில் கட்டியஇம் மன்னர் அறுபான்மும்மை நாயன்மார் களில் ஒருவராய்ப் போற்றப்படுகிருர். இம்மன்னர் எடுப்பித்த மாடக்கோயில்களில் ஒன்ருகப் பெருவேளூர் விளங்குகிறது.

**புராணவரலாறுகள் :**

முருகன் சூரபத்மனை அழிக்கச் செல்லும்போது இத்தலத் திற்கு வந்து வன்னிமரத்தடியில் தங்கித் தவம்செய்து தன் பெயரால் தீர்த்தம் உண்டாக்கி இறைவனை வழிபட்டு வேலாயுத மும் அருளாற்றலும் பெற்றுச் சென்ருர் என்றும் முருகன் வழிபட்டதால் இத்தலம் பெருவேளூர் என வழங்கப்பெற்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

இக்கோயிலின் மலைச்சிகரம் ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் நடந்த பலப்போட்டியில் கயிலைமலைச் சிகரங்களில் ஒன்ருக வந்து விழுந்தது என்று கூறப்படுகிறது.

திருமால் வழிபட்டு மோகினி வடிவம் நீங்கப்பெற்ற தலம் என்றும், பிருங்கிமுனிவர் சிவபெருமானை மட்டும்வழிபடுவதைக் கண்டு உமையம்மை தவமிருந்து பெருமான் திருமேனியில் இடதுபாகத்தைப் பெற்ற தலம் என்றும் கூறப்படுகிறது.

கங்கை தன்னிடம்வந்தடைந்த பாவங்கள் நீங்கச் சரவணப் பொய்கையில் நீராடி வழிபட்டு அருள்பெற்ருள் என்றும் கூறப் படுகிறது.

பைம்பொன்சீர் மணிவாரிப் பலவுஞ்சேர் கனியுந்தி
அம்பொன்செய் மடவரலா ரணிமல்கு பெருவேளூர்
நம்பன்றன் கழல்பரவி நவில்கின்ற மறைஞான
சம்பந்தன் தமிழ்வல்லார்க் கருவினைநோய் சாராவே.

## 2. திருத்தலையாலங்காடு

இத்தலம் கும்பகோணம் – திருவாரூர் பேருந்துச் சாலையில் குடவாசலுக்குக் கிழக்கே 8. கி. மீ தூரத்தில் உள்ளது. திருவாரூரிலிருந்து 18. கி. மீ தூரம் உள்ளது. தலையாலங்காடு என்ற இடத்தில் இறங்கி வடக்கு நோக்கி வாய்க்கால்கள் இரண்டைக் கடந்து சிறிது தூரம் சென்ருல் கோயிலை அடையலாம்.

இத்தலத்திற்கு அருகில் பெருவேளூரும் எண்கண் முருகன் தலமும் குடவாயிலும்உள்ளன. சோழநாட்டுக் காவிரித் தென் கரைத் தலங்களில் 93 ஆவது தலம். ஆலங்காடு என்னும் பெயருடைய ஊர்களில் முதலில் உள்ளதால் தலையாலங்காடு என வழங்கப்பெறுகிறது.

## தலச்சிறப்பு :

தாருகாவனத்து முனிவர்கள் இறைவனை அழித்தற் பொருட்டு ஏவிய முயலகனை அடக்கி அவன் முதுகின் மீது இறைவன் நடனம் புரிந்தருளிய தலம். கபிலமுனிவர் பூசித்த சிறப்புடையது. இத்தலத்தில் விளங்கும் தீர்த்தம் மிக்க விசேட முள்ளது. வெண்குட்டம் முதலிய சரும நோயினுல் பீடிக்கப் பட்டவர்கள் ஒருமண்டலம் இத்தலத்தில் தங்கி நீராடி இறைவ னுக்குத் தீபமிட்டுவழிபட்டு நோய் நீங்கப்பெற்று வருகின்றனர்.

தென்னிந்திய வரலாற்றில் புகழ் பெற்ற நகரமாக இவ்வூர் விளங்கியது. சங்ககாலத்தில் தலையாலங்கானம் என இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. இங்கு தான் பாண்டியன் நெடுஞ்செழிய னுக்கும் ஏனைய தமிழ்வேந்தர் இருவர்க்கும் கடும் போர் நிகழ்ந்தது. பாண்டியன்வெற்றிபெற்ருன்; தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற சிறப்புப் பெயரையும் பெற்ருன் எனப் புறநானூற்ருல் அறிகிருேம். இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத்திருப்பதிகம் ஒன்று உள்ளது. திருநாவுக்கரசர் தேவாரம் ஆரும் திருமுறையில் 25 ஆம் பதிகத்தின் 10ஆம்பாடலிலும், 15 ஆம் பதிகத்தின் 9 ஆம் பாடலிலும், 70 ஆம் பதிகத்தின் 3 ஆம் பாடலிலும், 71 ஆம் பதிகத்தின் 6 ஆம் பாடலிலும், சுந்தரர் தேவாரம் 7 ஆம் திருமுறையில் 12ஆம் பதிகத்தின் இரண்டாம்பாடலிலும் இத்தலம் குறிக்கப்படுகிறது.

## கோயிலமைப்பு :

ஊர் சிறியகிராமமாக உள்ளது. கோயில் கிழக்குநோக்கி யுள்ளது. இராஜகோபுரம் மற்றுமுள்ள பல மண்டபங்கள் இருந்து அழிந்திருக்கின்றன. இப்பொழுதுள்ளவை சுவாமி கோயிலும் அம்பாள் கோயிலும் மட்டுமே. இருப்பவை மிக்க திருத்தத்தோடு உள்ளன. அம்பாள் சந்நிதி வழியாகக்கோயிலை அடைகிருேம். முன்னுல் புகழ்மிக்க தீர்த்தம் உள்ளது. கைகால் களைத் தூய்மைசெய்து கொண்டு சிவசிந்தையுடன் சுவாமி சந்நிதியில் உள்ள விநாயகரை வழிபட்டு வலம்வருவோம்.

முதலில்விசுவநாதர் விசாலாக்ஷியுடன் விளங்கும் தனிக்கோயில் உள்ளது, தென்மேற்கே தலவிநாயகரும், வடமேற்கில் முருகன் கோயிலும் உள்ளன. சுவாமி சந்நிதியில் தனிமண்டபத்தில் பைரவர் சமயாசாரியர் முதலியோர் திருவுருவங்கள் உள்ளன.

சுவாமி கோயில் மகாமண்டபத்தை அடைவோம். துவார விநாயகரையும் சரசுவதியையும் கும்பிட்டு அருள்மிகு ஆடல் வல்ல பெருமானை மனமுருகி வழிபடுவோம். சுவாமி சதுரமான ஆவுடையார் மேல் விளங்குகின்றார். கருணைநிறைந்த திரு வுருவாய்க் காட்சிதந்து நம் நெஞ்சைநெகிழ்விக்கிறார்.

விடந்திகழும் அரவரைமேல் வீக்கினானை
விண்ணவர்க்கும் எண்ணரிய அளவிலானை
அடைந்தவரை அமருலகம் ஆள்விப் பானை
அம்பொன்னைக் கம்பமா களிறட் டானை
மடந்தை யொரு பாகனை மகுடந் தன்மேல்
வார்புனலும் வாளரவும் மதியும் வைத்த
தடங்கடலைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே.

என்று அப்பர் இத்தலத்து இறைவனைப் போற்றி உரைத்த திருப் பாடலைஓதி வழிபட்டு அம்பாள் கோயிலை அடைவோம். அம்பிகை தெற்குநோக்கி விளங்குகிறார். அழகிய திருவுரு வோடும் அருள் நிறைந்த முகமண்டலத்தோடும் காட்சி தருகிறாள் வழிபட்டு சண்டேசுவரரையும் தரிசித்துமீள்வோம்.

## மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு ஆடவல்லவரதர். வடமொழியில் நடனபுரீசுரர் என வழங்கப்படுகிறார். அம்பிகை திருப்பெயர் திருமடந்தையம்மை. வடமொழியில் பாலாம்பிகை என்கின்றனர். தீர்த்தம் – சங்குதீர்த்தம்.

அருகில் புகழ்பெற்ற எண்கண் முருகன் தலம் உள்ளது. தலையாலங்காட்டிலிருந்து தெற்கே 4 கி. மீ. தூரத்தில் உள்ளது. திருவாரூரிலிருந்து இத்தலத்திற்குவரும் பேருந்துகளில் செல்ல லாம்.

திருப்பெருவேளூரும், திருத்தலையாலங்காடும் இந்துசமய ஆட்சித்துறையினரால் எண்கண் கோயிலோடு இணைக்கப் பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

**தாருகாவன முனிவர்கள் :**

சிவபெருமானைமறந்து தாங்கள்மேற்கொள்ளும் ஒழுக்கமும் கன்மங்களுமே வீடுபேற்றைத்தரும் என்று கருதித்தாருகா வனத்து முனிவர்கள் ஒழுக்கசீலராய் வேள்விகள் பல செய்து வாழ்ந்தனர். இறைவன் ஒழுக்கமும் கடவுள் துணையின்றிக் கடைபிடித்தற்கியலாதது , என்பதை உணர்த்தத் திருமாலை மோகினியுருவில் உடனழைத்துக்கொண்டு பிக்ஷாடனராய்த் தாருகாவனம்வந்தார். மோகினியைக் கண்ட முனிவரும் பிக்ஷாடனரைக்கண்ட முனிபத்தினியரும் நிறையழிந்தனர். முனிவர்கள் சிவபெருமானது செயலை உணர்ந்து அவரை அழித்தற்கு அபிசாரவேள்வி செய்தனர். அவ்வேள்வியில் தோன்றிப் பெருமானை அழிக்கச்சென்ற யானையை உரித்தும் புலியைக்கொன்றும் மானைக் கையில்ஏந்தியும் வெற்றிவீரராகப் பெருமான் நின்றார். முனிவர்கள் வேள்வியில்தோன்றிய முயலகனை அவர்மீது ஏவினர். பெருமான் முயலகனை அடக்கி அவன் முதுகின்மீது திருநடம் புரிந்தருளினார். முனிவர்கள் சிவ பெருமானே பரம்பொருள் என்பதையும் அவனே வழிபடுவதே மேலான தவம் என்பதையும் அறிந்து உய்ந்தனர். முயலகன் மீது பெருமான் நடம்புரிந்தருளிய தலம் தலையாலங்காடு என்னும் இத்தலமாகும்.

## இத்தலங்களுக்கு அருகிலமைந்த வைப்புத் தலங்கள் :

இராப்பட்டீச்சரம் : திருநாவுக்கரசர் தேவாரம் 6 ஆம் திருமுறை 25 ஆம் பதிகம் 5 ஆம் பாடலில் இடம்பெற்றது.

காட்டூர் : திருஞானசம்பந்தர் தேவாரம் 2 ஆம் திருமுறை 39 ஆம் பதிகம் 7 ஆம் பாடலிலும், சுந்தரர் தேவாரம் 47 ஆம் பதிகம் 1 ஆம் பாடலிலும் இடம்பெற்றது.

தளிச்சாத்தங்குடி : பெருவேளூருக்குத் தென்பக்கத்திலும் மணக்காலுக்கு வடபுறத்திலும் உள்ளது. திருநாவுக்கரசர் தேவாரம் 6 ஆம் திருமுறை 25 ஆம் பதிகம் 10 ஆம் பாடலில் இடம்பெற்றது.

மணக்கால் : திருநாவுக்கரசர் தேவாரம் 6 ஆம் திருமுறை 25 ஆம் பதிகம் 10 ஆம் பாடலில் இடம்பெற்றது.

கட்டுரை எண். 19.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit,
D. P. P. A,. D. U. N. I. U.

**வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொறபாதமும்ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே.**

**அ. வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே**

(1) கொடிய எமன் என்னை எதிர்த்துவரும்போது நீ வெளிப்பட்டு நின்றருளவேண்டும்.

(2) "புலிகேசியின்மேல் படையெடுத்தான்", "சோழன் மேல் போர்தொடுத்தான்" என்பனபோல் 'என்மேல் வரும் போது' எனக் கூறும் நயம் சிறப்புடையது. நிச்சயம் சண்டையிடுவது என்ற முடிவுடன் பகையரசன் படை எடுப்பதுபோல் "இவனுயிரை இன்று நிச்சயம் கொண்டுசெல்வேன்" என்ற முடிவுடன் எமன் தனது சிங்காரப் படைகளுடன் புறப்பட்டு வரும்போது நீதான் வெளிப்பட்டு அருளிக் காக்கவேண்டும்.

(3) தனது பேரப்பிள்ளை வெளியில் புறப்படும்பொழுது பாட்டனார் கூறுகிறார்!

"மழைவரும்போல்தோன்றுகிறது, கையில் குடை எடுத்துச் செல்லேன்!"

"பரவாயில்லை வேண்டாம்" என்கிறான் பேரன்.

"இல்லை, இல்லை; கண்டிப்பாக மழைவரும். குடை எடுத்துப்போ" எனப் பாட்டனார் வலியுறுத்துகிறார்.

"மழைவரும்போது பார்த்துக்கொள்ளலாம் தாத்தா" என்கிறான் பேரன்.

இங்கு உறுதியாக மழைவராது என்ற பேரனின் நம்பிக்கை' 'வரும்போது ' என்ற சொல்லில் வெளிப்படுகிறது.

அவ்வாறே அன்னையின் அடியார்மேல் காலன் வரமாட்டான் என்பது உறுதி. அவளது பரிவாரங்களேவந்து அவளுல கிற்கே அழைத்துச்செல்வர். அப்படியே எமன் தவறிவந்து விட்டால் நீ வெளிப்படவேண்டும்.

எமன் என்ன தவறியாவந்துவிடுவான்? ஏன் வரமாட்டான்? அந்தாதி பாடுகின்ற அதே ஊரில்தானே அவன் மார்க்கண்டேயன் மீதுவந்து 'மாட்டிக்கொண்டு' உதையும் பட்டான்!

ஆகவே, அவன் தவறுதலாக, 'தெரியாத்தன'மாக வந்து விட்டாலும் நீதான் அருள்பாலிக்கவேண்டும்.

(4) போர்க்களத்தில் வீரபாகுதேவரின் சகோதரர்கள் எண்மரும் இறந்துகிடக்கக்கண்டபொழுது அவர் எமனுக்கே ஓலை எழுதினர். எமன் அதற்குப்பதில்கூறினன் :- "அவர்களை நானு என்னுலகுக்கு அழைத்துவருவேன்? எண்மரும் எண் தோள் ஈசன் திருவுலகுக்கே அல்லவா செல்வர்?" அத்துடன் அவர்களை எமனே மீட்டுவந்து தருவதாகக் கந்தபுராணம் கூறுகிறது இதையெல்லாம் அறிந்தும்கூட அருணகிரிநாதர் "கார்மா மிசை காலன்வரின்", "எமபடர் எனதுயிர் கொளவரின்" என்றெல்லாம் பாடுகிருர், ஏனெனில் எமனும் தவறுதலாக வருவதுண்டு.

ஆனுல் அருணகிரிநாதரும் 'வரின்' என்றே கூறுதல் காண்க.

(5) அவ்வாறு தவறுதலாக எமன் என்மேலும் வரக்கூடும். ஏனெனில் அவன் வெவ்விய காலன். கொடியவனுனதால் தனது கோபாவேசமிக்க தன்மையில் "எங்குச்செல்கிறோம்? யார் மீது செல்கிறோம்?" என்ற தெளிவு இல்லாமல் போகக் கூடும்!

(6) அபிராமிபட்டரும், அருணகிரிநாதரும் போன்ற மகான்களுக்கு வெவ்விய காலனைப்பற்றிச் சிறிதும்கவலையில்லை. "நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம்" என்ற நம்பிக்கை மிக்கவர்கள் தான். நம்போன்ற சராசரிமனிதர்களின் எமபயத்தைப் போக்கும் கருணையுள்ளத்தோடு, அப்பயத்தை நாம்போக்கிக் கொள்ளத்தக்க வழியைக் கூறுமுகத்தான் இவற்றைக் குறிப்பிடுகின்றனர் எனஉணர்தல் வேண்டும்.

அவ்வாறு அந்தகன் வருங்காலத்தில் எப்படிச் சிந்திக்க வேண்டுமென்பதனை பாடலின் முன்பகுதி குறிப்பிடுகிறது.

## ஆ. வவ்வியபாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும் செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும்.

(1) உன்னால் கவர்ந்து கொள்ளப்பட்ட இடப்பாகத்தை உடைய சிவபெருமானும நீயும் இணைந்து மகிழ்ந்திருக்கும் திருக்காட்சியின் அழகும், உங்களது திருமணக் கோலமும் ஆகிய காட்சியுமாக வெளிநிற்க வேண்டும்.

(2) காலனைக் காலால் கடிந்தவன் இறைவன். அவன் வருகை காலனைக்கடியும். அக்காலனை உதைத்ததோ அன்னைக் குரிய இடதுபாதம். ஆகவே இறைவனும் இறைவியும் இணைந் திருக்கும் கோலத்தியானம் காலனிடமிருந்து கடிந்து காக்கும் என்பது உறுதி.

(3) காலன் என்னுயிரைக் கவரவரும்பொழுது என்னை உன்பால் — உன் திருவடிக்கீழ் ஈர்த்து அருளும ஆற்றல் உனக்குஉண்டு. ஏனெனில், நீ இறைவனது இடப்பாகத்தையே வவ்வியவள் என்பது தோன்ற 'வவ்விய பாகத்து இறைவரும் நீயும்' என்றார்.

(4) இறைவனும் இறைவியும் இணைந்திருக்கும் பொழுது 'அனுக்ரஹம்' என்னும் அருட்செயல் சிறந்திருக்கும் என்பர். இணைந்து, அத்துடன் மகிழ்ந்தும் இருக்கும் நிலையில் திருவருள் பெரிதும் வெளிப்படும் அல்லவா? ஆகவே, அத்தகைய கோலத்தைக் காலன் வருங்காலத்தில் எண்ணுதல் சிறப்பு. அதுவும் அவளது இன்னருளால்தான் வாய்க்கும்.

(5) குண்டலினி யோகிகளுக்கு மூலாதாரம் முதல் ஆக்ஞா சக்கரம் வரை இறைவனும் இறைவியும் தனித்தனியே விளங்கும் கோலமும், சகஸ்ராரத்தில் அர்த்தநாரீசுவரராக இருக்கும் கோலமும் கிட்டும்.

(6) தனித்திருந்த அவர்கள் பின் திருமணம் புரிந்து கொண்ட திருக்கோலக் காட்சியினை நினைப்பது இன்னும் சிறப் புடையது. கல்யாண சுந்தரக்கோலம் என்னும் அக்காட்சியைக் காணத்திருமாலும், பலநாள்வேண்டித்தவமியற்றி, திருக்கோலக் காவில் அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தார் என்பது வரலாறு.

(7) மணமேடையில் அமர்ந்திருந்த அவர்கள் மகிழ்ச்சியுடன், சற்றே நிமிர்ந்து, ஒருவரையொருவர் அன்புப் பிணைப்புடன் பார்த்துக் கொண்டனர். "அந்தப் புன்னகையுடன் கூடிய பார்வை எப்போதும் நம்மீது விழுந்து கொண்டேயிருக்கட்டும்" என்று அப்பையதீட்சிதர் ஒரு ஸ்லோகத்தில் குறிப்பிடுகிறார்.

(8) குலசேகர பாண்டியன் என்பவர் 'மதுராபுரி அம்பிகை மாலை' என்னும் முப்பது பாடல்கள் கொண்ட நூலொன்று இயற்றியுள்ளார். காலத்தால் அபிராமி அந்தாதிக்கு முந்தியது எனக் கருதப்படும் அந்நூலில் பல இடங்களில் அபிராமி அந்தாதியின் 'சாயல்' காணப்படுகிறது. மரணத்தையும், அம்மையப்பன் திருமணத்தையும் பற்றிய குறிப்பு வரும் பாடல் வருமாறு :-

"விருந்துண்டு போகைக்கு நாயேன் சடலத்தை வெங்கழுகும்
பருந்தும் சுழலுமுன்னே வருவாய்! மணப்பந்தலிலே
திருந்தும் கரம் பற்றி நிற்பார் திருமுகச்செவ்வி எல்லாம்
அருந்தும் கயல் விழியாய்! மதுராபுரி அம்பிகையே!

(9) சராசரி மனிதர்கள் தங்கள் குழந்தைகள் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாய் வாழ்வதைப் பார்த்து விட்டுக் 'கண்ணை மூடவேண்டும்' என்றும், பேரக்குழந்தையின் திருமணக் கோலத்தையும் கண்டுவிட்டுக் கட்டையைச்சாய்க்க வேண்டும்' என்றும் ஆசையுறுவர். மக்களின் மகிழ்ச்சி, மக்கள் வயிற்று மக்களின் மணக்கோலம் இவற்றையே இறுதிக் காலத்திலும் கூட மனக்கண்ணில் கண்டு கொண்டே இருப்பது இயல்பு - ஆசை - அஞ்ஞானம்.

ஆனால், ஞானிகள், தங்கள் மகிழ்வின் மூலம் அனைத்துயிர்களையும் மகிழச்செய்யும் சிவசத்தியின் மகிழ்ச்சியையும் அவர்களது திருமணக்கோலத்தையுமே சிந்தை செய்வர். அச்சிந்தனை அவர்களையும் கடைத்தேற்றி உலகினையும் வாழ வைக்கும்.

## இ. சிந்தையுள்ளே அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து வெளிநிற்கவே,

(1) எனது மனத்தின்கண்ணுள்ள கோணல்களை முழுதும் நீக்கி ஆண்டு கொண்ட திருவடிகளுடன் கூடிய திருக்கோலத்துடன் வெளி நிற்பாயாக.

(2) அவ்வியம் என்பது வஞ்சகம், அழுக்காறு கவடு (கபடு) மனக்கோட்டம் ஆகியவற்றினைக் குறிக்கும். 'ஔவியம் பேசேல்' என்பது ஆத்திச்சூடி அறிவுறுத்தும் நீதி. அத்தீக் குணங்கள் நீங்கப்பெற்றவர்க்கே அவளது அருளும் திருவடி தீட்சையும் கிட்டும். "வஞ்சகர் நெஞ்சு அடையாள்" என்பார் பின்னும். "துஷ்ட்துரா – தீக்குணம் உடையவருக்கு எட்டா தவள்" என்பது சகஸ்ரநாமம்.

இயல்பாகவே அத்தகைய தீக்குணங்கள் எப்படியோ நம் சிந்தையுள்ளே அமைந்து விடுகின்றன. "கலகத்தரக்கர்பலர் கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் எங்கள் முத்து மாரியம்மா" என்பார் பாரதியாரும். அவற்றினை அவளேதான் போக்க முடியும். தன் அடியார்களிடம் அக்குணங்களின் சாயலே சிறிதும் இன்றி முழுதும் நீக்கி விடுவாள்அவள். "அகந்தைக் கிழங்கை அகழ்ந்து" எடுப்பவள் அவளேதான், எச்சம் சிறிதுமின்றி மனக்கோட்டங்கள் முழுதினையும் நீக்குவதால் "அவ்வியம் தீர்த்து என அழுத்தமாகச் சொன்னார்.

(3) அவ்வாறு ஆண்டு கொண்டு அபிராமி பட்டருக்கு அம்பிகை திருவடி தீட்சையும் கொடுத்தருளியிருக்கிறாள். "வாசக் கமலம் தலைமேல் வலிய வைத்து" என்ற பாடல் சான்றாகும்.

சிந்தைத் தூய்மையும், திருவடிதீட்சையும் அளித்த பொற் பாதங்களும் மேற்சொன்ன கோலங்களும் ஆகி எமன் வரும் பொழுது வெளிநிற்க வேண்டுகிறார்.

இறுதிக்காலத்தில் இறைவனைக்குறித்த இனிய சிந்தனை வாய்த்தல் இப்பாடலின் பாராயண பலனாகும்.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று இத்திருக்கோயிலுக்குள் உள்ள ஸ்ரீ சுயம்புநாத சுவாமியைத் தரிசிக்கவந்தேன். கோயில் மிகவும் சுத்தமாகவும் சுவர்களுக்கு வர்ணம் தீட்டப்பட்டு மிகவும் கவர்ச்சிமிக்க கோயிலாகவும் இருந்தது. மேலும் இக்கோயில் நிர்வாகம் சீரிய முறையில் நடைபெறுகிறது என அறிய மிக்க மகிழ்ச்சி. என் நல்வாழ்த்துக்கள்.

(ஒ - ம்) **சிவசுப்பிரமணியம்**

7—7—81 ஊராட்சி ஒன்றியம் ஆணையர், நன்னிலம்.

# ஊழும் முயற்சியும்

வித்துவான். திரு. மு. வைத்தியநாதன்,
திருச்சிராப்பள்ளி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

*முரணு? இல்லையா?*

"ஊழிற் பெருவலி யாவுள?" என்று கேட்கும் வள்ளுவர் "ஊழையும் உப்பக்கம் காண்பா" என்று கூறியுள்ளாரே இது முரணு? இல்லையா? என்றவின எழலாம். இரண்டிற்கும் உள்ள உரிமையை ஊன்றியுணர்ந்தால் முரண் இல்லை என்பது புலப் படும். ஊழும் முயற்சியும் விதையும் மரமும் போன்றவை. ஊழ் முன்னர் செய்தஅளவிற்கு நன்மை அல்லது தீமை செய்து முடியும். ஒருவன் உலையாது முயன்ருல் ஆகூழ் உடையவன் ஆகலாம். ஆகவே, போகூழ் அவனிடமிருந்து நீங்கும். அப்பொழுது ஆகூழின் ஆதிக்கம் ஏற்படும். மார்க்கண்டேயர் இதற்கு எடுத்துக்காட்டு ஆவார். தீயூழால் இயமன் தொடரும் நிலை ஏற்பட்டபோது, தன் வேண்டுதல் காரணமாக நல்லூழ் பெறும் நிலை ஏற்பட்டது. அதனுல், மரணத்தை வென்ருர். ஆனுல், அதற்குப்பின் அவர் இந்த உலகில்வாழவில்லை. பேரின்பவாழ்வு பெற்ருர். அந்த உயர்நிலையைத்தான் ஆகூழால் தேடிக்கொண்டான், சாவித்திரி யமனிடமிருந்து கணவனேப் பெற்றதும் இவ்வாறேயாம்.

*ஊழையும் :*

மேலும், 'ஊழையும்' என்பதில் உள்ள உம்மை, உயர்வு சிறப்புஉம்மையாகும். ஊழின் சிறப்பினே விளக்கவே கூறப் பட்டதாகும். அதை வெற்றிபெறமுடியாது என்பதே முடிந்த பொருள். இதைஎண்ணி வாளா இருக்கவேண்டாம். ஏதேனும் முயற்சி செய்க. செய்தால், செய்தஅளவு பயன்கிடைக்கும் என்பதை உணர்த்துவதற்கே இது சொல்லப்பட்டது.

*பழமொழி :*

எனவே, ஒருபேரரசன் செல்லும்போது, சிற்றரசன் ஒருவன் பணிந்து நிற்றல்போல, ஊழ்முற்படும் போது, முயற்சி அதற்குத்

தாழ்ந்து போய்விடும் என்று பழமொழியாசிரியர் அரையனுர் கூறியுள்ளார்.

## இயற்கை நியதி :

செய்யும் வினைக்குரிய நன்மை தீமையாம் பயனை எந்த முயற்சியாலும் தடுக்கமுடியாது. இயற்கை நியதியை மாற்ற வேண்டும் எனில்! அது இறைமையால்தான் முடியும். இதை நாவுக்கரசர் பெருமான், "மண்ணுளார் வினைதீர்க்கும்மருந்தினை" என்றும், நம்மாழ்வார் "வினையேன் வினைதீர் மருந்தானய்" என்றும் கூறுவதால் உணரலாம்.

## தாயுமானவர் :

சிலர் 'விதியை மதியால் வெல்லலாம்' என்பர். ஆனல், மதி மாயையின் மயக்கத்தில் அகப்படும் தன்மையுடையது. அதுமாயையில் அகப்பட்டு மயங்கும்போது, விதியிடம்தோற்று விடுகிறது என்கிருர் தாயுமானவர்.

"விதியையும் விதித்து என்னையும் விதித்திட்ட
மதியையும் விதித்து அம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருள்
கதியை எப்படி கண்டு களிப்பதே"

என்பது அவர் பாடல்.

## ஆகூழ்ஆதிக்கம் :

உலகியலில், ஆகூழின் ஆதிக்கம் உண்டு என்பதற்குச் சில சான்றுகளைக் காணலாம். ஜப்பான் நாட்டுச் சிறுவன் ஒருவன். அவனுக்கு ஏழுவயது, அந்தவயதில் அவன் எம். எஸ். ஸி. தகுதியுடைய படிப்புப்படிக்க அமெரிக்கநாடு சென்ருன். அந்த அளவு அவனுக்கு மனவளர்ச்சி இருந்தது. இது ஆகூழின் பயனல்லவா?

நம் திருஞானசம்பந்தரும் குமரகுருபரரும் மிகவும் இளைய வயதில், கவிச்சக்கரவர்த்திகள் போல் பாடல்பாடி மகிழ் வித்தனரே! அது எப்படி?

பீத்கோவன் என்று ஒரு இசைமேதை, அவன் மிகவும் இளையான். பல்வேறு இசைக்கருவிகளைத் தானே வாசித்து, அற்புதமான இசைஎழுப்புவதில் வல்லவன். இத்தனைக்கும் அவன் ஓர் பிறவிச்செவிடன். இந்த ஆற்றல் வந்தது எதனல்?

யாதிமெனுகின் என்றுஒரு இளைஞன். அவனிடம் எந்தப் பண், திறங்களைப் பாடிக் காட்டினாலும், உடனே அதைத் தெரி விக்கும் ஆற்றல் காணப்பட்டது. இது விட்டகுறையின் பயனல்லவா ?

இதற்கெல்லாம் தருக்கரீதியாக நம்மால் என்ன விளக்கம் தரமுடியும்? ஆகூழின் ஆற்றல் என்று தெரிவிப்பது தகுந்தானே!

## போகூழ் என்னசெய்யும் ?

போகூழ் படுத்தும்பாடும் அளப்பில. கங்கை நதிக் கரையிலேவாழ்ந்து, இந்துசமயத்தின் பாதுகாப்புப் பணியில் தன்னை ஒப்படைத்திருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் எத்தனை பெரிய அருளாளர். அவர் வாழ்வை விமர்சிக்க முடியுமா? என்றாலும் அவரைப் பிளவைநோய் வாட்டியதே ஏன்? எல்லாம் அறிந்த அவரால் அதைத்தடுக்க முடிந்ததா? அதிலிருந்து விடுபட முடிந்ததா ?

திருவண்ணாமலையில் வாழ்ந்த பகவான் இரமணர் எவ்வளவு பெரிய மெய்ஞ்ஞானி. அவர் காட்டிய பாதை, அமைதிப் பாதை யல்லவா? அவர் பொறுக்கவியலாத புற்றுநோயால் தன்னுருக் குலையும்நிலை அடைந்தாரே ! ஏன் ?

ஆணி மாண்டவியர் என்று ஒரு பெரியவர். தூய்மையான நெறிநின்றவர். அவர் நெறிபலரால் பின் பற்றப்பட்டது. அந்தப் பெரியாரை ஓர் அரசன் சந்தேகித்துக் கழுவில் ஏற்றினான். அதை அவரால் தடுத்துக் கொள்ள முடியவில்லையே ஏன் ?

குஜராத்திப் பெரியார் 'மோகனதாஸ் கரம்சந்த்காந்தி' என்னும் உலகம் புகழும் உத்தமர், பலகாவலர் பாதுகாத்த போதும் பொதுமக்கள் விழிப்போடு இருந்தபோதும், தீயான் ஒருவனின் தீக்குண்டுகளுக்கு இரையானாரே ஏன்? இவை எல்லாம் போகூழின் ஆதிக்கமன்றி வேறுஎன்ன? எனவே, மனிதன் ஊழிற்கு அடங்கியவன் தான் என்பது உறுதியாகிறது அன்றோ ?

## விதி ஒரு தொடர்ச்சங்கிலி :

விதி என்பது ஒருதொடர்ச்சங்கிலி போன்றது என்கிறார் கவி யரசர் பாரதி. அதற்குத் தொடக்கமும் இல்லை. முடிவும்இல்லை. சில் வாழ்நாள் பல் பிணிகளைஉடைய மனிதனால் இயற்கை விதி

யைக்கணித்தல் இயலாதுஎன்கிறுர். " இங்கிவையாவும் தவறிலா விதிஏற்று நடக்கும் செயல்களாம். முடிவு எங்கணும் இன்றி எவற்றினும், என்றும் ஏறி இடையின்றிச் செல்வதாம். ஒரு சங்கிலிஒக்கும் விதிகண்டீர்! வெறும் சாத்திரம் அன்று! இது சத்தியம். நின்று மங்கி ஓர் நாளில் அழிவதாம், எங்கள்வாழ்க்கை இதனைக்கடந்ததோ." என்பது அவரின் விதிக் கொள்கை.

## டால்ஸ்டாய் கருத்து :

இரஷ்ய ஞானி டால்ஸ்டாய் என்பவர் ஊழ்வலிமையில் நம்பிக்கை உடையவர். அவர் தன்னுடைய 'போரும் அமைதியும்' என்ற நூலில் எழுதும் செய்தியாவது ; 'பிரஞ்சுநாட்டு வீரன் நெப்போலியன், கடந்த நூற்ருண்டில் வாழ்ந்தவன். அவனைக்கண்டு ஐரோப்பிய மன்னர்களும்படைத்தலைவர்களும் அஞ்சினுர்கள். தன்முயற்சியால் தங்குதடையில்லாமல் நாட்டு எல்லையை விரிவுபடுத்திக் கொண்டே சென்ருன். ஆனல் அவன் இரஷ்ய சக்ரவர்த்தி அலெக்சாந்தரிடம் தோற்ருன். இந்த இருவரும் முயற்சியுடையவர்கள்தான். இவர்கள் பெற்ற வெற்றிகள் அனைத்திற்கும் இவர்கள் மட்டும் காரணம் அல்லர். உடன்பணி செய்தவர்களும் காரணமாவர். ஆனல், வரலாற்று நாயகர்களான இவர்கள் ஊழின்பெருவலியால் உந்தப்பட்டு ஊழின்கருவிகளாகவே செயல்பட்டு விளங்கினர். இவர்கள் செயலுக்கு ஊழே பின்னணியாகும்' என்று எழுதியுள்ளார்.

## நம்வாழ்வு :

நம்வாழ்வு 'பிறிட்ஷ்' சீட்டு விளையாடல் போன்றது. நமக்குக் கிடைக்கும் சீட்டுகள் நாம்தேர்ந்து எடுத்தவை அன்று. அவை பழவினைபோல் கிடைத்தவை. கிடைத்த சீட்டுகளைக் கொண்டு வெற்றி அல்லது தோல்வி அடைய நமக்கு உரிமையுண்டு. எனவே, பழவினைகளைக் கொண்டு உயர்வுதாழ்வு அடைவது மனிதவாழ்வுநிலையாகும்.

## இயற்கைச் சட்டம் :

ஒன்ருக இருப்பது பிரிதல் என்பது இயற்கை நியதி. அதைத் தடுக்கவியலாது. ஒருபழம் மரத்திலிருந்து உதிர்கிறது, இதற்குப் பலகாரணங்கள் கூறலாம். புவியீர்ப்புவிசை காரணம் என்பர். பழம் பருத்தமைகாரணம் என்பர். காம்பு உலர்தல் கரணம் என்பர். அல்லது பழம் உலர்ந்து போதல் என்பர்.

ஒருசிறுவன் உண்ண ஆசைப்பட்டான். அதனல் வீழ்ந்தது என்பர். இவை எல்லாம் நியாயம் உடைய காரணம்தான். ஆனல், மரத்திலிருந்து தோன்றிய, மரத்தோடுதொடர்புடைய பழம், அதனிடமிருந்து பிரிந்தே ஆகவேண்டும் என்பது இயற்கையின் சட்டம், அல்லது இறைமையின் நியதி. ஊழின் ஆதிக்கம். இச்செயல்தடுக்கப்பட முடியாதது.

பெருந் திரட்டு :

இந்த ஊழின் பேராற்றலைத் தெளிவுபடுத்துகிருர், பெருந் திரட்டு ஆசிரியர். "வாழ்வுகளால் என்? மறைநெறிஞானம் அதனல் என்? கேள்விகளால் என்? கிளர்மனுவால் என்? கிளையால் என்? வேள்விகளால் என்? விண்ணவரால் என்? விளைவுஎல்லாம் ஊழ்வினைதானே தருதலின், ஊழே இறை" என்று கூறியுள்ளதால் உணரலாம்.

பத்திரகிரி :

பத்திரகிரி ஊழைத் தெய்வநெறி என்பார். வீடுமுயல் யோகியர்களும் ஊழிற்குக் கட்டுப்பட்டவரே என்று கூறுகின்ருர்.

"ஆடல் பருந்தும் அடல்சிலைகொள் வேடும் இணை
மாடப் புறவை வவ்வ வந்து இறந்த வீடுமுயல்
யோகியர் களானலும் ஊழின்படி அனைத்தும்
ஆகுமிது தெய்வநெறி யாம்" * என்பது அவர்கூறும்முடிபு.

முடிவுரை :

எனவே, நீரில் குளித்தாலும் மேருவைக் கடந்தாலும், போரில்வாகை சூடினலும், கைத்தொழில் வாணிபம் கற்பினும், விசும்பில் பறவைபோல் பறப்பினும் ஒருவனுக்குப் பழைய கன்மத்தால் வரக்கடவன வந்தேதீரும். வராதனவரமாட்டா என்பதே ஆன்ருேர் முடிபாகும்.

---

* **கம்பர் :** இராமாயணத்தில் தவிர்க்கமுடியாத துன்பச் சூழல்களின் புகலிடமாக விதிக்கொள்கை அடிக்கடி பயன் படுத்தப்படுகிறது. இராமன், தாரையிடம் கூறும் பகுதியில் ஊழ் சிறப்புடன் எடுத்துரைக்கப்படுகிறது.

இராமனுக்கு மகுடம் இல்லை என்றபோது சீறியெழுந்த இலக்குவன், இராமன் அமைதிப்படுத்தவும் அடங்காதவனய், "விதிக்கும் விதிசெய்யும் விற்ருெழில்காண்டி" என்றவன் பஞ்ச வடியில் சீதை, வற்புறுத்தலால் அவளைப் பாதுகாத்தலொழிந்து அண்ணனைக்காக்கச் செல்பவன், "வெஞ்சினவிதியை வெல்ல வல்லமோ" என்று முரண்படுவதைச் சுட்டி மனிதஇயல்பையும் விதியின் ஆற்றலையும் கம்பர் விளக்கியுள்ளார்.

# சைவாகமங்கள்

**திரு. செ. சுவாமிநாதக் குருக்கள்**

முன்னாள் பொதுக்காரியதரிசி,

தென் இந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை–1.

உலகிலுள்ள உயிர்கள் யாவும் அநாதியாகவே ஆணவ மலத்துடன் கூடினமையால் தானாகவே அறியும் அறிவின்றி அறிவிக்க அறியும் இயல்புள்ளனவாகும். அவை, இறைவனை வழிபடும் முறையை அறிந்து மலங்களிலிருந்து நீங்கி நற்பேறு பெற வேண்டுமென்ற பெருங் கருணையால் சிவபெருமான் காமிகம் முதலாக வாதுளமிறுதியாயுள்ள இருபத்தெட்டு ஆகமங் களையும் நாதஸ்வருபத்தில் தோன்றச் செய்தார்.

இவ்விதம் நாதவடிவில்தோன்றிய ஆகமங்களைச் சதாசிவர், ஈசான தத்புருஷ அகோர வாமதேவ ஸத்யோஜாதமென்னும் ஐந்துமுகங்களினாலும் பிரகாசப்படுத்தினர். அவ்வாகமங்களின் பெயர்கள் பின்வருமாறு :–

1. காமிகம், 2. யோகஜம், 3. சிந்த்யம், 4. காரணம், 5. அஜிதம், 6. தீபதம், 7. ஸூக்ஷ்மம், 8. ஸஹஸ்ரம், 9. அம்சுமத், 10, ஸுப்ரபேதம், 11. விஜயம், 12. நிச்வாஸம், 13. ஸ்வாயம்புவம், 14. விமலம், 15. வீரம், 16. ரௌரவம், 17. மகுடம். 18. விமலம், 19. சந்த்ரஞானம், 20. முகபிம்பம், 21. ப்ரோத்கீதம், 22. லலிதம், 23. ஸித்தம், 24. ஸந்தானம், 25. சர்வோக்தம், 26. பாரமேச்வரம், 27. கிரணம், 28. வாதுளம் என்பனவாகும்.

இவ்விருபத் தெட்டாகமங்களில் காமிகம் முதல் அஜிதம் வரையுள்ள ஐந்தும் ஸத்யோஜாத முகத்திலும், தீபதம் முதல் ஸுப்ரபேத மிறுதியான ஐந்தாகமங்களும் வாமதேவ முகத் திலும், விஜயம் முதல் வீரம் வரையுள்ள ஐந்தும் அகோர முகத்திலும், ரௌரவம் முதல் முகபிம்பமிறுதியாயுள்ள ஐந்தும் தத்புருஷ முகத்திலும், ப்ரோத்கீதம் முதல் வாதுள மீருயுள்ள எட்டு ஆகமங்களும் ஈசான முகத்திலும் உதித்தனவென்று கூறப்படுகின்றன.

இவ்விதம் இருபத்தெட்டாகமங்களையும் சதாசிவர் தனது ஐந்து முகங்களினின்றும் தோற்றுவித்து, அவைகளை முதலில்

வித்யேச்வரர்களுக்கு உபதேசித்தார். பிறகு பிரணவர் முதலான பத்து சிவர்களுக்கு, காமிகம் முதல் ஸுப்ரபேதம் முடியவுள்ள பத்தாகமங்களையும் கற்பித்தார். இவை சிவர்களுக்கு அருளப் பெற்றமையின் சைவபேதங்களென வழங்கப் பெறுகின்றன.

அவ்விதமே அநாதி ருத்திரர் முதலான ருத்திரர்களுக்கு விஜயம் தொடக்கமான எஞ்சிய பதினெட்டாகமங்களையும் உபதேசம் செய்தார். ருத்திரர்களுக்கு உபதேசிக்கப்பட்டதால் அவை ருத்திரபேதங்ளென வழங்கும்.

மந்திரமயமான வடிவங்கொண்ட சதாசிவரின் திருமேனிக்கு மந்திரரூபமான இவ்வாகமங்கள் உறுப்புக்களாக அமைந்தன வென்று கூறப்படுகின்றன. இவ்வாகமங்கள் ஒவ்வொன்றுக்கும் பல உட்பிரிவுகள் உள்ளன. அவைகள் உபாகமங்களென வழங்கப்பெறுகின்றன. இவ்வுபாகமங்கள் 207 என நூல்களில் கூறப்படுகின்றன.

காமிகம் முதலிய ஏனைய ஆகமங்கள் யாவும் சிவபரத் வத்தை உணர்த்துவதால் **சைவாகமங்க**ளெனக் கூறப்படு கின்றன. எல்லா விதமான அறிவுக்கும் முடிவாயுள்ள அறிவை உண்டுபண்ணுவதால் சித்தாந்தங்களென நூல்களில் வழங்கப் பெறுகின்றன. இவைகளிற் கூறப்பெற்ற நெறியில் ஒழுகுகின்ற வர்களைக் காப்பாற்றுவதாலும், தத்துவ மந்திரங்களை உபதேசிப் பதாலும் தந்திரங்களெனவும் பிரசித்தமாயுள்ளன.

இவ்வாகமங்களின் குருபரம்பரை பின்வருமாறு:— சதா சிவனால் அநந்தேச்வரருக்கும், அநந்தேச்வரரால் ஸ்ரீ கண்ட ருக்கும், ஸ்ரீ கண்டரால் தேவர்களுக்கும், தேவர்களால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மனிதர்களுக்கும், மனிதர் களால் மற்றுமுள்ள மனிதர்களுக்கும் உபதேசிக்கப்பெற்று, பூமியின்கண் பரவின என நூல்கள் கூறும்.

இவ்வாகமங்களுக்குள்ள சுலோக எண்கள் பரார்த்தம் முதல் பலவாறாக நூல்களில் கூறப்படுகின்றன. அவைகள் சிஷ்யர்களின் சௌகரியத்தைப் பொருத்து ஆசிரியர்களால் பல தடவை சுருக்கி ஸங்கிரஹரூபமாக உபதேசிக்கப்பெற்றன வென்றும் நூல்களால் விளங்கும். இப்பொழுது கிடைக்கும் ஆகமங்கள் அப்படிச் சுருக்கிச் செய்யப்பட்டவைகளேயாகும்.

இவ்வாகமங்களும் ஒவ்வொன்றும் **சதாசிவனின்** திருமேனிக்கு எந்த உறுப்பென்பதும், இவைகளின் முதலில்

உள்ள சுலோகங்களின் எண்ணிக்கை யாது என்பதும், அவைகளைக் கேட்டோர்கள் யாவர் என்பதும், அவைகளுக்கு உட்பிரிவாயமைந்த உபாகமங்களின் பெயரும் கீழ்வருமாறு அறியக்கிடைக்கும் :

1. **காமிகம்**—உறுப்பு -இருபாதங்தள். எண்-பரார்த்தம். கேட்டார் - பிரணவர், த்ரிகதர், ஹரர். உபாகமங்கள்-வக்தாரம், பைரவோத்தரம், நாரஸிம்ஹம் என மூன்று.

2. **யோகஜம்** — உறுப்பு - இருகணைக்கால்கள், எண் - லக்ஷம், கேட்டோர் - ஸுதாக்யர், பஸ்மர், விபு. உபாகமங்கள்- தாரம், வீணசிகோத்திரம், ஆத்மயோகம், ஸந்தம், ஸந்ததி என ஐந்து.

3. **சிந்த்யம்**—உறுப்பு - திருவடிகளின் விரல்கள். எண்- லக்ஷம். கேட்டோர்-தீப்தர், கோபதி, அம்பிகா, உபாகமங்கள் - ஸுசிந்த்யம், ஸுபகம், வாமம், பாபநாசம், பரோத்பவம், அம்ருதம் என ஆறு.

4. **காரணம்** — உறுப்பு - இருதண்டைக்கால்கள். எண்- கோடி. கேட்டோர்- காரணர், சர்வர், ப்ராஜபதி. உபாகமங்கள்- பாவனம், மாரணம், தௌர்கம், மாஹேந்த்ரம், பீநஸம்ஹிதா, காரணம், வித்வேஷம் என ஏழு.

5. **அஜிதம்** — உறுப்பு - இருமுழந்தாள்கள். எண் - அயுதம். கேட்டோர்-ஸுசிவர், சிவர், அச்யுதர். உபாகமங்கள்- ப்ரபூதம், பரோத்பூதம், பார்வதீஸம்ஹிதா, பத்மஸம்ஹிதா என நான்கு.

6. **தீப்தம்** — உறுப்பு - இருதொடைகள். எண் - நியுதம். கேட்டோர் - ஈசர், த்ரிமூர்த்தி, ஹுதாசனர். உபாகமங்கள் - அமேயம், அப்தம், ஆச்சாத்யம், அஸங்க்யம், அமிதௌஜசம், ஆநந்தம், மாதவோத்பூதம், அத்புதம், அக்ஷயம் என ஒன்பது.

7. **ஸூக்ஷ்மம்** — உறுப்பு - குஹ்யம். எண் - பத்மம். கேட்டோர் - ஸூக்ஷ்மர், வைச்ரவணர், ப்ரபஞ்ஜனர். உபாகமம், ஸூக்ஷ்மம், ஒன்று.

8. **ஸஹஸ்ரம்** — உறுப்பு -இடுப்பு. எண் சங்கம். கேட்டோர் - காலர், பீமர், தர்மர், உபாகமங்கள் - அதீதம், மங்கலம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக், ப்ரபுத்தம், விபுதம், ஹஸ்தம், அலங்காரம், ஸுபேதம் எனப் பத்து.

**9. அம்சுமத்**— உறுப்பு - முதுகு. எண் - ஐந்து லக்ஷம். கேட்டோர் - அம்சு, உக்ரர், ரவி. உபாகமங்கள் - வித்தியா. புராண - தந்த்ரம், வாஸவம், நீலலோஹிதம், ப்ராஹ்மம், வாஸிஷ்டம், ஈசானேத்திரம் எனப் பன்னிரண்டு.

**10. ஸுப்ரபேதம்**—உறுப்பு - தொப்புள். எண் - மூன்று கோடி. கேட்டோர் - திசேசர், கணேசர், சசீ. உபாகமம் - ஸுப்ரபேதம் ஒன்று.

**11. விஜயம்** — உறுப்பு - வயிறு. எண் - மூன்று கோடி, கேட்டோர் - அநாதிருத்திரர் பரமேச்வரர். உபாகமங்கள் - உத்பவம், ஸௌம்யம், அகோரம்,ம்ருத்யுநாசனம், கௌபேரம், மகாகோரம், விமலம், விஜயம் என எட்டு.

**12. நிச்வாஸம்** — உறுப்பு - ஹ்ருதயம். எண் - கோடி. கேட்டோர் - தசார்ணர், சைல - ஸம்பவர். உபாகமங்கள் - நிச்வாஸம், நிச்வாஸோத்தரம், நிச்வாஸஸுகோதயம், நிச்வாஸ நயனம், நிச்வாஸகாரிகா, நிச்வாஸகோரம், நிச்வாஸ குஹ்யம் மந்த்ரநிச்வாஸம் என எட்டு.

**13. ஸ்வாயம்புவம்** — உறுப்பு - இரு ஸ்தனங்கள். எண் - ஒன்றரைக்கோடி. கேட்டோர் - நிதனர், பத்மஸம்பவர். உபாகமங்கள் - ப்ரஜாபதி மதம், பத்மம், நளினேத்பவம் என மூன்று.

**14. அனலம்** — உறுப்பு - இரு கண்கள் எண் - மூன்று அயுதம். கேட்டோர் - வ்யோமர், ஹுதாசனர், உபாகமம் - ஆக்நேயம் ஒன்று.

**15. வீரம்** — உறுப்பு - கழுத்து. எண் - நியுதம் கேட்டோர் - தேஜஸ், ப்ராஜாபதி. உபாகமங்கள் - ப்ரஸ்தரம், புல்லம், அமலம், ப்ரபோதகம், அமோஹம், மோஹஸமயம், சகடம், சகடாதிகம், பத்ரம், விலேகநம், வீரம், ஹலம், போதகம் எனப் பதின்மூன்று.

**16. ரௌரவம்** — உறுப்பு - இருகாதுகள். எண் - எட்டு அற்புதம். கேட்டோர் - ப்ரஹ்மணேசர், நந்திகேச்வரர். உபாகமங்கள் - காலாக்கியம், காலதஹனம், ரௌரவர், ரௌரவோத்தரம், மஹாகாலமதம், ஐந்த்ரம் என ஆறு.

**17. மகுடம்**—உறுப்பு - திருமுடி. எண் - லக்ஷம். கேட்டோர் - சிவர், மஹாதேவர், உபாகமங்கள் - மகுடம், மகுடோத்தரம் என இரண்டு.

**18. விமலம்** — உறுப்பு – கைகள். எண் – மூன்றுலக்ஷம். கேட்டோர் – ஸர்வாத்மா, வீரபத்ரர். உபாகமங்கள் – அநந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷபிங்கம், வ்ருஷோதரம், வ்ருஷோத் பூதம், ரௌத்ரம், ஸுதெந்தம், தாரணம், ஆரேவதம், அதிக் ராந்தம், அட்டஹாஸம், பத்ரவிதம், அர்ச்சிதம். அலங்க்ருதம், விமலம் எனப் பதினாறு.

**19. சந்த்ரஞானம்** — உறுப்பு – மார்பு. எண் – மூன்று கோடி, கேட்டோர் – அநந்தன், பரஹஸ்பதி, உபாகமங்கள் – ஸ்திரம், ஸ்தாணு, கஹாந்தம், வாருணம், நந்திகேச்வரம், ஏகபாதபுராணம், சாங்கரம், நீலருத்ரகம், சிவபத்ரம், கல்ப பேதம், ஸ்ரீமுகம், சிவசாஸனம், சிவசேகரம், தேவீமதம் எனப் பதினான்கு.

**20. முகபிம்பம்** — உறுப்பு – திருமுகம். எண் – லக்ஷம். கேட்டோர் – ப்ரசாந்தர், ததீசி. உபாகமங்கள் – சதுர்முகம், ஸமஸ்தோபம், ப்ரதிபிம்பம், அயோகஜம், ஆத்மாலங்காரம், வாயவ்யம், தௌடிகம், துடிநீரகம், குட்டிமம், துலாயோகம், காலாத்யயம், மஹாஸெளரம், பட்டசேகரம், நைர்ருதம், மஹாவித்யா எனப்பதினைந்து.

**21. ப்ரோத்கீதம்** — உறுப்பு – நாக்கு. எண் – மூன்று லக்ஷம். கேட்டோர் – சூலி, கவசர். உபாகமங்கள் – வராஹம், கவசம், பாசபந்தம், பிங்கலாமதம், அங்குசம், தண்டதரம், தனுர்தரம், சிவஞானம், விஞ்ஞானம், ஸ்ரீகாலஞானம், ஆயுர் வேதம், தநுர்வேதம், ஸர்பதம் ஷ்ட்ரவிபேதநம், கீதகம், பரதம், ஆதோத்யம் எனப் பதினாறு.

**22. லலிதம்** — உறுப்பு – இருகன்னங்கள். எண் – எட்டாயிரம். கேட்டோர் – ஆலயர், ருத்திரபைரவர். உபாக மங்கள் – லலிதம், லலிதோத்ரம், கௌமாரம் என மூன்று.

**23. ஸித்தம்** — உறுப்பு – நெற்றி. எண் – ஒன்றரைக் கோடி, கேட்டோர் – பிந்து, சண்டேச்வரர். உபாகமங்கள் – ஸாரோத்தரம், ஔசனஸம், சாலாபேதம், சசிமண்டலம் என நான்கு.

**24. ஸந்தானம்** — உறுப்பு – குண்டலங்கள். எண் – ஆறுயிரம். கேட்டோர் – சிவநிஷ்டர், சமசபாயனர். உபாக மங்கள் – லிங்காத்யக்ஷம், ஸுராத்யக்ஷம், அமரேச்வரம், சங்கரம், அஸங்க்யம், அநிலம், த்வந்தம் என ஏழு.

**25. சர்வோக்தம்** — உறுப்பு - யஞ்ஞோபவீதம். எண் - இரண்டு லக்ஷம். கேட்டோர் - ஸோமதேவர், ந்ருஸிம்ஹர். உபாகமங்கள் - சிவதர்மோத்தரம், வாயுப்ரோக்தம், திவ்யப்ரோக்தம், ஈசானம், சர்வோத்கீதம் என ஐந்து.

**26. பாரமேச்சுவரம்** — உறுப்பு - முத்துமாலை. எண் - பன்னிரண்டு லக்ஷம். கேட்டோர் - ஸ்ரீதேவி, உசநஸ். உபாகமங்கள் - மாதங்கம், யக்ஷணீலத்மம், பாரமேச்வரம், புஷ்கரம், ஸுப்ரயோகம், ஹமசம், ஸாமான்யம் என ஏழு.

**27. கிரணம்** — உறுப்பு - ஆபரணங்கள். எண் - ஐந்து கோடி. கேட்டோர் -தேவதார்க்ஷ்யர், ஸமவர்தர். உபாகமங்கள்- காருடம், நைர்ருதம், நீலம், ருக்ஷம், பானுகம், தேனுகம், காலாக்கியம், ப்ரபுத்தம், புத்தம் என ஒன்பது.

**28, வாதுளம்** — உறுப்பு - திருப்பரிவட்டம். எண் - லக்ஷம். கேட்டோர் - சிவர் , மஹாகாலர். உபாகமங்கள் - வாதுளம், வாதுலோத்தரம், காலஞானம், ப்ரரோஹிதம், ஸர்வம், தர்மாத்மகம், நித்யம், ச்ரேஷ்டம், சுத்தம், மஹாநநம், விச்வம், விச்வாத்பகம் எனப் பன்னிரண்டு.

---

( 474 ஆம் பக்கத் தொடர்ச்சி )

யாற்றினார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரை அருளிப் பின் தமிழ் முதுகலை வகுப்பினைத் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரில் தொடங்கி வைக்கும் முகமாக ஆவணிமூல விழாமலராகிய சிவஞான சித்தியார் - சுபக்கம் ( திரு. சா. சு. பிள்ளை உரை நயையுடன் ) என்ற நூலை முதுகலை வகுப்பு மாணவர்கட்கு வழங்கியருளினார்கள்.

'சங்கத்தமிழ்ச்செல்வர்' திரு. சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரையாற்றித் தம் நன்றிப் பெருக்கைத் தெரிவித்தார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளக் குறிப்பின் வண்ணம் சங்கத்தமிழ்ச்செல்வர் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆதீனக்கல்விநிலைய மாணவமாணவிகட்குப்பரிசுகள் வழங்கினார். விழாவிற்கு அறிஞர் பெருமக்களும் மாயூரம்நகரப் பெருமக்களும் வந்திருந்தனர். இறைவழிபாட்டுடன் விழா இனிது நிறைவுற்றது.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு 28—8—81 வெள்ளிக்கிழமை யன்று காலை திருத்தலையாலங்காடு, அருள்மிகு ஆடவல்லவரதர் திருக்கோயிலிலும் மாலை திருப்பெருவேளூர் அருள்மிகு பிரியா ஈசுவரர் திருக்கோயிலிலும் விசேஷஅபிஷேக ஆராதனைகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பட்டன. அச்சிடப்பெற்ற, தலத்திருப்பதிகங்கள் அடங்கிய வெளியீடு அன்பர்கட்கு வழங்கப்பட்டது. ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகளும், தருமையாதீனப்புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ. அவர்களும் திருத்தலையாலங்காட்டுத் திருக்கோயிலில் சமய விரிவுரை நிகழ்த்தினர்கள். அன்பர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டு பயனுற்றனர்.

## மறைஞான சம்பந்தர் குருபூஜைவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில், சந்தானகுரவருள் மூன்றுமவராகிய ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருபூஜைவிழா 31—8—81 திங்கட்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை சந்தானசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். மாலை 7 மணி அளவில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. 'மறைஞானசம்பந்தர்' பற்றியும், வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ. 'வினாவெண்பா'ப்பற்றியும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் பி. லிட். 'சந்தானகுரவர்' பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்.

அன்று சிதம்பரம் திருக்களாச்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள மறைஞான

சம்பந்தர் குருமூர்த்த ஆலயத்திலும் ஸ்ரீ மறைஞானசம்பந்தருக்குத் தருமையாதீனத்தின் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்புவழிபாடுகளும் நிகழ்வுற்றன.

## சமபந்தி போஜனம்
## முப்பத்தைந்தாவது சுதந்திர தினவிழா

இந்தியநாடு விடுதலை பெற்ற முப்பத்தைந்தாவது சுதந்திர தினவிழாவினையும் இந்து சமுதாய ஒற்றுமை எழுச்சியையும் முன்னிட்டு 15—8—81 சனிக்கிழமை, சுதந்திர நாளன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் காலை 9 மணி அளவில் தருமபுரம் ஸ்ரீ ஞான புரீசுவரர் திருக்கோயிலிலும், ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயிலிலும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. காலை 8 மணியளவில் ஆதீனக் கல்வி நிலையங்களில் கொடியேற்று விழா நிகழ்வுற்றது. நண்பகல் 12 மணியளவில் ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் சமபந்திபோஜனம் நடைபெற்றது. ஊர்ப்பெரு மக்களும் அரிசனங்களும் சமபந்தி போஜனத்தில் கலந்து கொண்டனர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருளாணையின் வண்ணம் தருமையாதீன அருளாட்சிக்குட்பட்ட தேவஸ்தானங்களில் சமபந்திபோஜனம் நிகழ்வுற்றது.

## தருமையாதீனத்தில் ஆவணிமூலப் பெருவிழா

தருமையாதீனத்தில் 6, 7, 8—9—1981 ஆகிய மூன்று நாட்களிலும் ஆவணிமூலப் பெருவிழாவும், ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாவும், மிகச்சிறப்பாக நடைபெற்றது விழா நாட்களில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களின் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பான முறையில் நடைபெற்றன.

8—9—81 செவ்வாய்க்கிழமை ஆவணிமூலத் திருநாளன்று காலை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷவழிபாடு நிகழ்வுற்றது. விழாமலராகச் 'சிவஞான சித்தியார் சுபக்கம்' (திரு. கா. சு. பிள்ளை உரைநடையுடன்) வெளியிடப்பெற்றது.

இந்நாளில் ஆண்டுதோறும் அறிஞர் ஒருவருக்குச் சிறப்புப் பட்டமளித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருள் வார்கள். அம்முறையில் இந்நன்னாள் மாலை வழிபாட்டின்போது டாக்டர் திரு. சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்குச் 'சங்கத் தமிழ்ச்செல்வர்' என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கினார்கள்.

ஆவணி மூல விழாவையொட்டி மூன்று நாட்கள், தருமை யாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நிகழ்வுற்றது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம் பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா 6—9—81 ஞாயிறன்று மாலை3மணியளவில் சேரர்திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. தருமையாதீனத்தமிழ்ப்புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம்.ஏ. அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். வித்துவான் திருமதி. ப. நீலா, எம்.ஏ. 'சிலப்பதிகாரம்' பற்றியும் வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ. 'பதிற்றுப் பத்துப்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியரால் கலைநிகழ்ச்சி நடத்தப் பெற்றது.

தருமையாதீனத் தேவாரப் பாடசாலை, வேதசிவாகம பாட சாலை ஆண்டுவிழா 7—9—81 திங்களன்று மாலை 3 மணியளவில் சோழர் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ. 'பெரியபுராணம்' பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட், 'மூவருலாப்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் நிலைப்பள்ளி மாணவ மாணவியரால் கலைநிகழ்ச்சி நடத்தப் பெற்றது.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, சைவசித்தாந்தக் கல்லூரி ஆண்டுவிழா 8—9—81 செவ்வாய்க் கிழமையன்று மாலை 7 மணியளவில் பாண்டியர் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. இந்நாளில் தருமையாதீனப்பல்கலைக் கல்லூரி தமிழ் முதுகலை வகுப்புத் தொடக்க விழாவும் நிகழ்வுற்றது. இறை வணக்கத்திற்குப்பின் ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டறிக் கைகள் படிக்கப்பெற்றன. தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ. அவர்கள் 'பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல்' பற்றி உரை

( தொடர்ச்சி 471 ஆம் பக்கம் பார்க்க )

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதிஷு புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய

(17—9—81 முதல் 16—10—81 முடிய)

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசி | | ரா செ |
| கே | | | ல/ |
| | | சு | சூ. பு கு சனி |

| | | | |
|---|---|---|---|
| | ல/ | சனி சந். | |
| கே | அம்ஸம் | | கு |
| சூ | | | ரா பு |
| சு | செ | | |

ஸ்ரீ துன்மதிஷு ஆவணிமீ 31உ புதவாரம் அசுவதி நக்ஷத்திரம் பத்திரைகரணம்கூடியகாலத்தில் சூரியஉதயம் முதல் 54 நாழிகை 45 விஞடிக்கு சிம்மலக்கினத்தில் ஸ்ரீலோகா ரட்சகரான சூரியபகவான் லோகத்தில் மாந்தர்கள் புத்திதீட்சண்யத்துடன் ஆற்றல் மிகுந்தவர்களாக மிளிரும் பொருட்டு சிம்மராசியிலிருந்து கன்னியாராசி சங்கிரமணமாக புரட்டாசி மாதப் பிரவேசம் செய்தருள்கிருர். புரட்டாசிமீ 1உ குருவாரம் ஷடசீதி புண்ணியகாலமாகும். சங்கிரமகாலகிரகஸ் திதியின் பலனுவது உலகில் விஞ்ஞான அறிஞர்களால் துரித அலுவல்களுக்கு ஏதுவான நவீன சாதனங்கள் பல படைத்தலாகி வெளிவருவதாகும். எல்லாவகைப் பொருள்களின் உற்பத்திச் சாலைகளில் நாகரிக, புதிய மாதிரிப் பொருள்கள் வெகுவாக உற்பத்தியாகி பிரஜைகளின் நுகர்வுக்கு வரும் சங்கீதம், நடனம், சித்திரம்,

சிற்பம் ஆகியவற்றின் தொன்மை, சிறப்பு, பாரம்பர்ய ஞான வான்கள் ஆசான்கள் வாயிலாக கலைஞர்களால் புதுமைப் பொலிவுடன் சிறக்கும். எல்லா இன் ஜனங்களும் சரஸ்வதி கடாக்ஷத்தினல் கலைகள் பல பயின்று அவ்வத்துறையிலும் வித்தகர்களாகித் துறைகளில் பொருள் ஈட்டி முன்னேற்ற ஸ்திதியில்விளங்குவர். தேசங்களில் ஆளுநர்கள் தெய்வநீதி யாகவும் சமதர்மமாகவும் எல்லாச் சமயத்தவருக்கும் நடுநாயக மாக இருந்து அறநெறியில் பரிபாலனம் செய்து வருவார்கள். அனைத்து பிரஜைகளும் தேசபக்தியுடன் நல்ல சிந்தையுடைய வர்களாகி வாழ்வார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பூர்வத் தவபயனாக ஈஸ்வரனருள்பெற்று வந்து சிவபூசையே நித்தியப்பணியாகக்கொள்கின்ற பாக்கியத்தில் திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் லோகத்துக்கு நன்மார்க்கம் போதித்து அருளிச் செய்வார்கள். அவர்களைத் தரிசித்து அருள்பிரசாதம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் எழுபிறவியிலும் நீங்காதபாபம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்குவதாகும். அன்னார் திருநோக் கில் தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சாஸ்திரோக்த சம்பிரதாய வழியில் பரமனுக்கு நித்தியம் ஆறுகாலபூசைகள் விசேஷ ஆராதனைகள் சிறப்பாகநடைபெற்றுவரும். பிரஜைகள் எல்லோரும் தெய்வதரிசனம் செய்து, மனத்தூய்மையடைந்து, நற்கர்மங்கள் புரித்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்லபணவருமானம் வந்துகொண்டிருக்கும். ஆபரண பிராப்தியையளிக்கும். அக்டோபர் 7உ ஆனல் வீடு. மனை ஸ்திர சொத்துக்களிலிருந்து நல்லன ஏற்பட்டுவரும், வித்துவத்துவத்தில் புகழ் ஏற்படும். அரசாங்க கௌரவம் உயர்பதவி ஏற்படுதல் ஆகும். எல்லாக்காரியங்களிலும் ஜெய பிராப்தியை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். செப்டம்பர் 17, 18, 21, 22, 28, 29, 30 அக்டோபர் 1, 7, 8, 9, 10, 11, 14, 15 தேதிகளில் தன வரவு நல்லவர் பிரபலஸ்தர் சந்திப்பு ஊக்கமிகுதி ஆகிய நற்பலன்களை ஏற்படுத்தும். அக்டோபர் 2, 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½
( இ. ஊ. ஏ. - ஒ. வ, வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் கௌரவத்திற்கு ஏற்ப, பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி கலைதுறைகளில் பிரசித்தம் ஏற்படும். தெய்வதரிசனம், நல்லவர் பிரபலஸ்தர்களிடம் உரையாடுதல் ஆகியவை நேரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஞாயிற்றுக்கிழமை சூரிய அர்ச்சனை செய்ய குடல்வியாதி நீங்கும். செப்டம்பர் 19, 20, 23, 24, 30 அக்டோபர் 1, 2, 3, 4, 10, 11, 12, 13, 16 தேதிகளில் மிகுந்த நற்பலன்களை ஏற்படுத்தும். அக்டோபர் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾
( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணம் வரவுசெலவும் சரிசமனாக இருந்துவரும். சமூகத்தில் சில விவாதபிரச்சினைகள்வந்து சரிபடும். வித்தியா வியாபாராதி கலைதுறைகளில் விசேஷபலன்தரும். வீடுவாகனங்களின் பிராப்தியில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்திவரும். புத்திரி அல்லது பௌத்திரிக்கு சுபமங்களம் ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். செப்டம்பர் 17, 18, 21, 22, 25, 26, 27 அக்டோபர் 2, 3, 4, 5, 6, 12, 13, 14, 15 தேதிகளில் விசேஷமான பலனை ஏற்படுத்தித்தரும். அக்டோபர் 7, 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.
( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். இரத்தினபூஷணங்கள், வாசனாதிகந்த நுகர்வு, உல்லாசம் தரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். புனிதஸ்தலம் செல்லுதல் தெய்வதரிசனம் ஆகிய நற்பலன் கிடைக்கும். அரசாங்க கௌரவம்தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 17, 18, 19, 20, 23, 24, 28, 29 அக்டோபர் 5, 6, 7, 8, 9, 14, 15 தேதிகளில் விசேஷபலனை ஏற்படுத்தும். அக்டோபர் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் கணிசமாகவரும். அதற்கேற்ப நல்ல காரியங்களில் செலவும் ஆகும். பூஷணங்களின் பிராப்தியையளிக்கும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம்தரும். வித்தியாவியாபாராதிகளில் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 19, 20, 21, 22, 25, 26, 27, 30 அக்டோபர் 1, 7, 8, 9, 16 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களையளிக்கும். அக்டோபர் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½
(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். பூமியில் இயந்திரசாதனங்களில் விருத்திபலன் ஏற்படும். தெய்வதரிசனம், நல்லவர் பிரபலஸ்தர் சந்திப்பு, நல்வசனம் கேட்டல், சங்கீதம், சற்கதாகாலட்சேபம் கேட்டல் இவற்றில் ஆனந்தம்தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 21, 22, 23, 24, 28, 29 அக்டோபர் 2, 3, 4, 10, 11, 12, 13 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களையளிக்கும். செப்டம்பர் 17, 18 அக்டோபர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் நல்ல விதத்தில் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு மேன்மை ஸ்திதி ஏற்படும். பிதாநலம்க்ருதி ஓர் முக்கிய செலவினைச் செய்யும். பூமியில் விருத்திபலன் ஏற்படும். ஒப்பந்த லேவாதேவிகளில் முன் முதலீடு ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 17, 18, 23, 24, 25, 26, 27, 30 அக்டோபர் 1, 5, 6, 12, 13, 14, 15 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களையளிக்கும். செப்டம்பர் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

( தோ. - ந. நி. நு. நே. - ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் நான்குவிதக்களில் பணவருமானங்களை ஏற்படுத்தும். ஸ்திரிவழியினரில் கௌரவ டாம்பீகங்களில் செலவும் ஆகும். சகோதரர் சகோதரிகளின் சுபிட்சம் நன்ருக இருந்துவரும். வீடுவாகனங்களின்பிராப்தியில் நல்லசௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செப்டம்பர் 17, 18, 19, 20, 25, 26, 27, 28, 29 அக்டோபர் 2, 3, 4, 7, 8, 9, 14, 15, 16 தேதிகளில் தனுதாயம் சந்துஷ்டி ஆகிய நற்பலன்களையளிக்கும். செப்டம்பர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. - பு. த. ப, ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் கண்யத்திற்கு ஏற்ப பணவருமானம்வரும். கலைதுறைகளில் பிரபலம்தரும். வீடுவாகனங்களின் பிராப்தியில் நல்லசௌகரியம் தரும். இராசிக்கு ஓர் விபத்து ஏற்பட்டுத் தப்பும். புத்திரருக்கு சில் விஷபீடிதம் அல்லது தோல்வியாதி வந்து குணமாகும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். செப்டம்பர் 19, 20, 21, 22, 28, 29, 30 அக்டோபர் 1, 5, 6, 10, 11, 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். செப்டம்பர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம்¾ - திருவோணம்- அவிட்டம்½

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் கணிசமாக பணவருமானத்தை ஏற்படுத்தித் தரும். அக்டோபர்மீ ஓர்பெருந்தொகைகைக்குவரும். சகோதரர் சகோதரிகளின் நலம் நன்ருகஇருந்துவரும். இயந்திரவாகனம் பழுதாகிச் சீர்படும். புத்திரர் பௌத்திரிகளின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். மனைவிநலம் பாதித்து உடன்குணமாகும், செப்டம்பர் 21, 22, 23, 24, 30 அக்டோபர் 1. 2, 3, 4, 7, 8, 9, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். செப்டம்பர் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

**11. கும்பம்:-** அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும், குடும்பாபி விருத்தியில் பண வருமானம் சீராக இருந்துவரும். சகோதரர் விசுவாசம் ஒத்துழைப்பு பலன்தரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நல்ல ஸ்திதி ஏற்படும். எழுத்து மூலத்தில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். முயற்சிக்கின்ற எல்லா காரியங்களும் அனுகூலமாக இருந்துவரும். செப்டம்பர் 17, 18, 23, 24, 25, 26, 27 அக்டோபர் 2, 3, 4, 5, 6, 14, 15, தேதிகளில் நற்பலன் தரும். செப்டம்பர் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம், மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்,

**12. மீனம்:-** பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ஞ சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுகை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தி வரும். சகோதரர்கள் நல்லஸ்திதியில் இருந்துவருவர். வித்தியா வியாபாரதி கலைதுறைகளில் மேலிடத்திய நன்மைகளை ஏற்படுத்தும். அரசாங்க நிர்பந்தகாரியங்கள் கெடியாகச்செயல் பட்டுக்கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செப்டம்பர் 19, 20, 25, 26, 27, 28, 29 அக்டோபர் 5, 6, 7, 8, 9, 12, 13 தேதிகளில் மிகுந்த நற்பலன்தரும்- செப்டம்பர் 30 அக்டோபர் 1 இத்தேதிகளில் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று இத்திருக்கோயிலுக்கு ஸ்ரீ சுயம்புநாத சுவாமியைத் தரிசிக்க வந்தோம். கோயில் மிகவும் சுத்தமாகவும் கவர்ச்சி யாகவும் இருந்தது. எம்பெருமானையும் பெருமாட்டியையும் தரிசிக்கும்போது சிலகணங்கள் எங்களை மறந்த நிலையில் இருந்தோம் என்பது மிகையாகாது. அம்பாளை தரிசிக்கும்போது அபிராமியை இங்கும் கண்டோம். மேலும் நன்குவளர எமது பிரார்த்தனைகள்.

(ஒ - ம்) **வி. க. நரசிம்மன்**
22—7—81 அதிகாரம் பெற்ற அலுவலர், மாயூரம்.

# -: புரட்டாசிமாதச் சிறப்பு நாட்கள் :-

17—9—81 வியாழன், ஷடசீதிபுண்ணியகாலம். திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். சங்கடஹர சதுர்த்தி.

18—9—81 வெள்ளி, மகாபரணி, தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம்.

19—9—81 சனி, வேளூர்க் கிருத்திகை.

20—9—81 ஞாயிறு, காளாஷ்டமி.

21—9—81 திங்கள், மத்தியாஷ்டமி வியதீபாதம்.

24—9—81 வியாழன், ஆயில்யவிழா.

25—9—81 வெள்ளி, பிரதோஷம், கலியுகாதி.

26—9—81 சனி, வேளூர் கேதாரவிரத பூர்த்தி. தருமபுர ஆதீன மடாலயத்தில் கேதாரவிரத பூஜை. மாதசிவராத்திரி, ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் குருபூஜை.

27—9—81 ஞாயிறு, மகாளய அமாவாசை. பகல் மணி 12-58க்கு கன்னியாராசியில் சூரியன், சந்திரன், புதன், குரு, சனி ஆகிய ஐந்து கிரஹங்களின் சேர்க்கை.

28—9—81 திங்கள். தருமை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு நவராத்திரி உற்சவ சண்டிஹோம பூர்வாங்கம்.

29—9—81 செவ்வாய், சகல தேவாலயங்களிலும் நவராத்திரி பூஜை ஆரம்பம். தருமையில் ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டியக்ஞாரம்பம். வேளூர், சீகாழி,திருக்கடவூர், திருவையாறு ஆகிய தலங்களில் நவராத்திரி 9 நாட்கள் அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை நடைபெறும். இரவு மணி 10-12க்கு கன்னியாராசியிலிருந்து ஐந்துகிரஹ சேர்க்கை நிவர்த்தி.

4—10—81 ஞாயிறு, தருமை ஸ்ரீ துர்க்காம்பிகை சந்நிதியில் மாலை வில்வவிருக்ஷ அபிமந்திரணம்.

5—10—81 திங்கள், காலை ஸ்ரீ துர்க்காம்பிகை சண்டியக்ஞ யாக சாலையில் நவபத்திரிகாகிரஹணம். இன்றுமுதல் வேளூர், கடவூர் ஆகிய தலங்களில் மூன்று தினங்கள் சூரியபூஜை.

6—10—81 செவ்வாய், ஸ்ரீ துர்க்காம்பிகை சண்டியக்ஞ யாகசாலையில் அஷ்டாதச ஆயுத மண்டல பூஜை.

7—10—81 புதன், மகாநவமி, சரஸ்வதிபூஜை. ஆயுதபூஜை. தருமை ஆதீன ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை சந்நிதியில் நடைபெறும் சதசண்டியக்ஞ மகாபூர்ணாஹுதி. சோபனத் திரவிய சமர்ப்பணம். இரவு மண்டலபூஜை. வேளூர், சீகாழி, திருக்கடவூர். திருவையாறு ஆகிய தலங்களில் அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தி.

8—10—81 வியாழன், விஜயதசமி. தருமை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞகலசாபிஷேகம். விசேஷபூஜை.

9—10—81 வெள்ளி, தருமையாதீனம் 4 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை.

11-10—81 ஞாயிறு, பிரதோஷம்.

12-10—81 திங்கள், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

13-10—81 செவ்வாய். பௌர்ணமி விரத பூஜை. நிறைபணி. மாத பூஜையில் அபூபம் சாத்துதல், வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருபுவனம், திருவையாறு, திருவாரூர் முதலிய தலங்களில் நிறைபணி, திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை.

16-10—81 வெள்ளி, கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். சங்கடஹரசதுர்த்தி.

GNANASAMBANDAM · Regd. No Tn / NM 2

உ
சிவமயம்

# ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி

## 31 ஆவது

## சதசண்டி வேள்வி நிகழ்ச்சிகள்

**29—9—81 முதல் 8—10—81 முடிய**

ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் :—

காலை மாலை சதசண்டி வேள்வி
சுவாசினீ குமாரி வடுபூஜை
சதுர்வேத பாராயணம்
துர்க்கா சூக்த பாராயணம்
திருமுறைப் பாராயணம்
அபிராமி அந்தாதி பாராயணம்
ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு லட்சார்ச்சனை
ஸ்ரீ வித்தியாசக்ரமாகிய மேருவிற்கு
ஸகஸ்ரநாமார்ச்சனை
விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள்

7—10—81 புதன்கிழமை பகல்

சப்தசதி ஹோமம்,
மகாபூர்ணாகுதி, சதசண்டிவேள்வி பூர்த்தி

8—10—81 வியாழக்கிழமை காலை

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு
மகாகலசாபிஷேகம்

குறிப்பு :— பாராயணம் காலை, மாலை 6-30 மணி முதல் இரவு 8-30 மணி வரை நிகழும்.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-9-81